746

உ

கடவுள் துணை.

# "பைந்தமிழ்"

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு—திருக்குறள்.


| தொகுதி | ருத்ரோத்காரி௵ ஆனிமீ | பகுதி |
|---|---|---|
| 1 | 1923௵ ஜூன்மீ | 6 |


## கடவுள் வணக்கம்.

### விநாயகர்.

" சத்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொரு ணல்குவ
சித்தி யானைதன் செய்யபொற் பாதமே."

### ஆறுமுக நாயனார்.

" ஆறுமணி மவுலியுங்கண் ணீராறுங் குழைகளீ ராறும் பால
மாறுநற் பவளவா யாறுமா ரூவெழுத் தாறுமானோ
ஞறுமிளிர் துண்டமுந்தோ ளீராறுங் கரங்களீ ராறுஞ்சோதி
யாறுவத னமுந்தொழுவோ ராறுத பிறவியினைப் பாறு வாரே."

---

அண்டபகி ரண்டமும் மாயாவி காரமே
யம்மாயை யில்லா மையே
ஆமெனவு மறிவுமுண் டப்பாலு மறிகின்ற
வறிவினை யறிந்து பார்க்கின்
எண்டிசை விளக்குமொரு தெய்வவரு ளல்லாம
லில்லையென நினைவு முண்டிங்
கியானென தறத்துரிய நிறைவாகி நிற்பதே
யின்பமெனு மன்பு முண்டு
கண்டன வெலாமல்ல வென்றுகண் டனைசெய்து
கருவிகர ணங்க ளோயக்
கண்மூடி யொருகண மிருக்கவென் றற்பாழ்த்த
கன்மங்கள் போராடுதே

144200

பண்டையுள கன்மமே கர்த்தா வெனும்பெயர்ப்
    பக்ஷநா ணிச்சிப்பனே
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
    பரிபூர ணனந்தமே.

வென்றுளே புலன்க ளைந்தார் மெய்யுண ருள்ளந் தோறுஞ்
சென்றுளே யமுதமூற்றுந் திருவருள் போற்றி யேற்றுக்
குன்றுளே யிருந்து காட்சி கொடுத்தருள் கோலம் போற்றி
மன்றுளே மாறியாடு மறைச்சிலம் படிகள் போற்றி.

## "பைந்தமிழ்" வாழ்த்துக்கவி.

உலகுபுகழ் செகதீச னிடத்திருந்து பைந்தமிழ்தா னுதித்தாற் போன்றே
இலகுசென்னைச் செகதீசனிடத்திருந்தே 'பைந்தமிழ்தா னெழுந்த தின்னாள்
பலகலைதேர் பண்டிதரின் பணியணிந்து மதிதோறும் பவனி போந்து
நிலவுறவே திருவருளைச் சிந்தித்து வந்தித்து நிகழ்த்து வோமே.

ஜி. சதாசிவம் பிள்ளை,
(நாகை, நீலலோசனி.)

# இந்தியாவின் புராதன வியாபாரமும் தற்கால மாறுதலும்.

(All Rights Reserved.)

குறிப்பு:—இதன் கீழ்கண்ட வியாஸமும் அதன் தொடர்ச்சிகளும் ஒருவரும் பிரசுரிக்கவும் மொழி பெயர்க்கவும் கூடாது.

ஆயிரக்கணக்கான வருஷங்களுக்குமுன்பே, ஐரோப்பா கண்டமுழுவதும் ஜனங்கள் குடியேறுவதற்கு முன்னதாகவும், மத்தியதரைக்கடற் பக்கம் ஓங்கி வளர்ந்து அரசாட்சியும் பெருமையும் அடைந்து ஐரோப்பிய நாகரீகத்தின் பிறந்தவிடமெனக் கொண்டாடப்படும் கிரேக்கிய, ரோம, எகிப்து நாடுகள் தங்களது பேரை நிலைநிறுத்துவதற்கு முன்னதாகவும், அஸீரியா, பாபிலோனியா முதலிய தேசங்கள் செழித்தோங்கும் காலத்துக்கு முன்னதாகவும், நமது பிரிட்டிஷ் ஜனங்கள் இங்கிலாந்து தீவுக்கு குடியேறுவதன்முன் இருந்த அநாகரீகத் தன்மையிலேயே அழுந்



திக்கிடந்த காலத்திலும், நமது தாய் நாடான பரதகண்டம் தனது குறைவற்ற செல்வத்தாலும் நீர்வள நிலவளங்களாற் செழித்த தன் வயல்களாலும் தான்யத்தாலும் வெகு உன்னத நிலையடைந்திருந்ததென்பது சகல தேசிய சரித்திரர்களும் ஒப்புக்கொள்ளும் உண்மையான விஷயமே. பரதகண்டத்தின் குறைவற்ற செல்வத்தாலும் இணையற்ற உயர் சாக்குகளினாலும் அந்நிய நாட்டார்கள் தத்தம் நாடுகளுக்கு நம்நாட்டின் விளைவுப்பொருள்களைக் கொண்டு போய் வர்த்தகம் செய்வதிலேயே ஈடுபட ஆரம்பித்தார்கள்.

இப்பரதகண்டவாஸிகளது உத்தம உண்மைக்குணமும், அவர்களது சிறந்த ஆசாரம் பழக்க ஒழுக்கங்களும், பல்லாயிரக் கணக்கான வருஷங்களில் உண்டான படையெடுப்பு, குழப்பம் முதலியமாறுதல்களாலும் மாற்றலாகக் கூடாதபடி தங்கள் தேசாசாரங்களை உறுதிப்பாட்டுடன் நிலைபெறச் செய்திருந்த ஏற்பாடுகளும், சேர்ந்து பாரதமக்களை சுத்த நிஷ்கபடமான ஜீவனத்தோடு மேலான கலைஞானம் முதலிய தத்துவத்தை யடையச்செய்தன. ஒவ்வொரு பாகங்களிலுள்ள சிற்றரசர்களும் அவரவர்களது தேகப் பராக்கிரமத்திற் பேறடையச்செய்தன. வறுமையென்பது சிறிதுமற்று, வணிகர்கள் ஒவ்வொரு சரக்கும் உயர்ந்த மாதிரியிலிருக்குமாறு செய்து சேகரித்தும், கைத்தொழில் விர்த்தியடைந்தும், புலவர்கள் புகழக்காரணமும் ஏற்பட்டது.

நாம் அறிந்துள்ள உண்மையானதும் பாரபக்ஷமற்றதுமான சரித்திரங்களில் ஆராய்ச்சி செய்யுங்கால், அக்காலத்தில் உலகமேடையில் நடித்துத்துலங்கிய ஜாதியார்களில் பாரதமக்கள்தான் நாகரீகத்திலும் அரசாங்கரீதியிலும், கைத்தொழில் வர்த்தகத்திலும் உயர்ந்த நிலைமையிலிருந்தார்களென வறிகிறோம்

சில சரித்திராசிரியர்கள் பரதகண்டத்தில் சில கைத்தொழில்களும் முக்கியமாய் சிற்பி சாஸ்திரம் எகிப்து தேசத்திலிருந்து பரதகண்டத்துக்குவந்து நிலை யடைந்ததெனக் கூறுவார்கள். அதற்குச் சாக்ஷியம் இப்பரதகண்டத்துடன் எகிப்து தேசத்தார்கள் முதன் முதல் வர்த்தக நிமித்தம் போக்கு வரவு செய்தார்கள் என்பதாகக் கூறுவார்கள். ஆயினும் வாணிபம் சிறந்திருந்த கா

JL
03111211, N23P4
N23.4.6.

ணங்கொண்டே எகிப்து தேசத்தார்களுக்கு பரதகண்டத்துடன் சம்மந்தம் ஏற்பட்டதென்று அவர்களே யொப்புக்கொள்வதால் பரத நாட்டின் வர்த்தகப்பெருமைக்கு அவர்களது வாசகமே சாக்ஷியமாகும்.

பரத நாட்டில் முதன் முதல் வர்த்தகசம்மந்தமாய்ப் படையெடுத்து வந்தது எகிப்து தேசத்தில் அரசுபுரிந்த ஸிஸோஸ்த்ரிஸ் (Sesostris) என்னும் அரசன் காலத்தில்தான். பரத நாட்டின் நீர்வளம் நிலவளம் செல்வம் முதலியவைகளால் பொறாமையுற்றுக் கவர்ந்து செல்ல முன்வந்தது எகிப்து தேசத்தார்களே. இவர்கள் பாரத வருஷத்தின்மேற் படையெடுத்து கங்காநதிக்கரைவரையுள்ள சிற்றரசர்களை தங்கள் தேசத்துக்கு கப்பம் கொடுக்கும்படி கட்டாயப்படுத்தின போதிலும் ஸிஸோஸ்த்ரிஸ் என்பவன் இறந்ததும் எகிப்து தேசாஜீய சம்மந்தம் பரதகண்டத்தில் முடிவடைந்தது. அவனுக்குப்பின் வந்த அரசர்கள் பலக்குறைவாலோ அல்லது பிற நாட்டுக்குள் தலையிட்டுக்கொள்ள வேண்டாமென்ற சாந்த குணத்தாலோ, பரதகண்டத்தோடு வியாபார சம்மந்தம்மட்டுமிருந்தாற் போதுமென்ற எண்ணங் கொண்டிருந்தார்கள்.

அப்போது பாரதமக்கள் பிறநாட்டாரின் ஹிம்ஸையென்பது சிறிது மின்றி, நல்ல அறிவுணர்ச்சியால் ஏற்படுத்தப்பட்ட தருமநூலாம்சட்டங்களனுஷ்டித்தும் கலைஞானத்தின் பகுதிகளிலெல்லாம் உயர்ந்த தேர்ச்சியடைந்தும் வந்தார்கள். வரவர மற்ற தேசங்கள் முன்னுக்கு வரும்போதும் பரதகண்டத்து சுத்தநேர்மையான நீதிநூலனுஷ்டானமும், வித்தைப்பயிர்ச்சியும், வர்த்தகச்சிறப்பும், சரக்குகளின் உயர்வும் அத்தேசத்தார்களின் மனதைக் கவர்ந்தன.

பரதகண்டத்துடன் வர்த்தகம் செய்துதான் தங்கள் நாடு மேன்மை யடையவேணுமென்றும் ஒவ்வொரு தேசத்தார்களுக்கும் உணர்வுண்டாயிற்று.

இக்காரணங்கொண்டே சுமார் இரண்டாயிரத்தைந்நூறு வருடங்கட்குமுன் உயர்வடைந்திருந்த பாரசீகநாட்டு அரசர் டரையஸ் (Darius Hystaspes) என்பவர் பரதகண்டத்தை சாச்வதமாக கீழ்ப்படுத்தவேணுமென்ற அவாக்கொண்டு படையெடுத்தார்.



அவரது பராக்கிரமமும் ஸிந்துநதிக்குக் கீழ்புரம் பரவவில்லை. பாரத மக்களின் நடையுடைபாவனைகளை முற்றுமறிய காரணமேற்படாமற் போயிற்று. வருஷா வருஷம் கப்பம் கொடுக்குமாறு சிற்சில சிற்றரசர்களை தொந்தரவு செய்யப்பட்டது. ஆயினும் சில வருஷங்களுக்கெல்லாம் இச்சிற்றரசர்கள் கப்பம் கொடுப்பதை நிறுத்தியதுமல்லாமல் பாரசீகதேச பராக்கிரமமும் சீர்குலைந்தது.

இக்காலத்துக்கு இருநூறு வருஷங்களுக்குப் பிறகு மாஸிடோன் தேசாதிபதியான அலெக்ஸாண்டர் (Alexander) பாரசீக தேசத்தைத் தன்வசமாக்கியபின் பரதகண்டத்துச் சிற்றரசர்களின் கப்பம் தனக்கு வரும்படி ஏற்பாடு செய்யுமாறு நம் நாட்டின்மேல் படையெடுத்தான். ஸிந்துநதியின் மேற்கரை யடைந்ததும் இந்நாட்டின் செழுமையையும் செல்வத்தையு மறிந்தானாகி அவைகளைத் தானடைய எண்ணங்கொண்டு அந்நதியைக்கடக்கலானான். அப்போதுதான் அலெக்ஸாண்டர் தான் பாரதமக்களின் பராக்கிரமத்தையும் வீரியத்தையும் முற்றிலும் தன்மனதில் முன்னமே கருதவில்லையெனக் கண்டான். வீரசூரர்களைச்சேகரித்து அவனது போக்கைத்தடுத்து யுத்தஞ்செய்ய முன்வந்த புருஷோத்தமரின் காம்பீரியத்தைக்கண்டு சிந்தாகுலனானான். இப்புருஷோத்தமனையும் வென்று இன்னும் கிழக்கே வந்திருந்தால் கணக்கற்ற புருஷோத்தமர்கள் களங்கமற்ற கீர்த்தியுடன் கங்காநதிக்கரையில் தடுத்து மாஸிடோன் மன்னனின் இன்னுயிர் விண்ணடைந்திருக்கும். அவனது ஜீவனும் கங்காஜலத்தால் புனிதப்பட்டிருக்கும். அந்தோ! அவனது சைன்யங்கள் யுத்தநிலையில் வெறுப்படைந்து பாரசீகத்துக்குத் திரும்புமாறு கட்டாயப்படுத்தவே, அலெக்ஸாண்டரும் அதற்கு உடன்பட்டு பாபிலோ (Babylon) னில் தனது அரண்மனையில் தன் துன்மார்க்க நெறியாலுண்டான நோயால் உயிர்மாய்ந்தான்.

(தொடரும்).

துவேஷம் துவேஷத்தால் தீராது பொறுமையினாலும்
அன்பாலுமே தீரும்.

# கவுதம புத்தர் கூறிய ஒரு கதை.

கங்கை பாயுங் காசிமா நகரில்
பிரமதத்தனும் பெருநில வேந்தன்
கீர்த்தியுடனே செங்கோல் செலுத்தினான்
கோசல தேசக் குரிசிலாகிய
தீர்க்கேதி யென்பவன் சீரறங்குதிகொள
பிறர்மனம் நோவாப் பெற்றிமையுடனே
யவனியை யாட்சிசெய் யமயந்தன்னில்
காசிராஜன் கவுசல னெளிமையைக்
கண்டவனரசைக் கவரக்கருதியே
படையை யனுப்பிப் பாரைக் கொண்டனன்
கோசலத்தரசன் குடும்பத்துடனே
பலதேயத்தும் பன்னாட் டிரிந்து
காசிப்பதியைக் கடிதினடைந்தே
யுருவ மாறியோர் குலாலன் மனையில்
குடியாயிருந்து கூலிகொண்டு
வயிறுவளர்க்க மனைவியோர்மகவை
யீன்று தீர்க்காயு செனப் பெயரிட்டனர்
பிறமதத்தனாற் பேரிடர் வருமென
வேற்றிட மனுப்ப வித்தையிற் றேர்ந்து
வளர்ந்து வந்தனன் மகனவன்றந்தையைப்
பழம்பதிதனிலிருந்தோர் பரிகாரி
கண்டன னவனைக் காட்டிக்கொடுத்தால்
காசிராஜன் கனகமீவா னெனக்
கோளுரை கூறிக் கொற்றவனவனை
மனைவியுடனே வலித்துக் கொணர்ந்தே
கொல்லும் வண்ணம் கொலைஞர்பாற்கூற
அவ்வாறவரை யழைத்து வரும்வழி



தற்செயலாகத் தனயன் காணவே
ஆங்குளோர்யாரு மறியா வகையில்
புத்ர சோகத்தாற் புலம்புதல்போலத்
"தாமதஞ் செயாதே யவசரப்படாதே
துவேஷம் துவேஷத்தாற்றீராது
பொறுமையினாலும் பொருந்துமன்பாலுமே
தீருமே யன்றித் தீரா" தென்றான்
அன்னோன்றன்னை யவன் மனையுடனே
கொன்றனர் காசிக்குரிசில் சொற்படியே
மைந்தனோ அந்த மயானம் புகுந்து
காவலாளர்க்குக் காசுகொடுத்துப்
பிணங்களை வாங்கிப் பிரேதச் சடங்கெலாம்
இயற்றின னதனையவ் வேந்த லறிந்து
சத்துரு மகனாற் றன்னுயிர் போமென
வேங்கியிருந்தன னிவ்வாறிருக்க
மைந்தனோ காடு போய் வாய்விட்டலறிக்
காசிப்பதியைக் கடிதினடைந்து
அரசனுக் கமைந்த யானைச் சாலையில்
வேலைக் கமர்ந்தவன் வேலைபார்க்குங்கால்
ஓர்நாளிரவி லுறங்குதல் முன்னர்
வீணையிற் பாட வேந்தன் கேட்டே
ஆனந்த மெய்தி யவனை யழைத்துத்
தன்னரண்மனையிற் றான்பொறுப்புள்ள
வேலையிலமர்த்தி மேன்மைப் படுத்தினன்
வணக்கமுங் கூர்மையும் மதிநலப் பெருக்கமும்
குறித்தகாலங் கோடா வரவும்
ஒழுக்கத் துயர்ந்த வுத்தம நடையும்
பார்த்திபன் பார்த்துப் பாங்கினில் வைத்தனன்
வேட்டம் வேட்டுக் காட்டகம் புக்க
வேந்தனோடுமிவ் வேலையாள் சென்றனன்
மன்னன்களைத்தோர் மரத்தினடியில்
சத்துருமடியிற் றலைவைத் துறங்கினன்
பழியைத் தீர்க்கும் பான்மையனாகி
வாளையுருவினான் "மகனே குழந்தாய்
தாமசஞ் செய்யாதே யவசரப்படாதே
துவேஷம் துவேஷத் தாற்றீராதே"
யென்றுதன் றந்தையன் றியம்பிய மொழிகளைக்
கருத்தினி லெண்ணினன் கத்தியைப்போட்டனன்
அச்சமயத்தி லரசன் றீக்கனவைக்

கண்டு புலம்பிக் கண் விழிப்புற்றான்
அரசே நீ யேன் அஞ்சினையென்னத்
தீர்க்காயுசுவால் சிவன் போமென்றே
அஞ்சினே னென்ன வரசன் குடுமியை
யிர்த்துப்பிடித்தே யிர்வாளுருவி
யவன்றான் யானென் றரசர்க் குரைத்து
நாடுகவர்ந்துநற் றாயைத்தந்தையைக்
கொன்றபழியின் குறை தீர்ப்பே னென
அரசனஞ் சியைய நின்னபயம்
பிராணப்பிச்சை பெருகத்தரு கென
உன்னுயிரிருந்தா லென்னுயிர்போமே
யாதலாற் பிராணனை யருளுவதெங்ஙனம்?
என்றுகூற விருவரும் சத்தியம்
செய்துகொண்டே சிநேக மெய்தினர்
தந்தைகூறியதற்குத் தரும்பொருள்விளைவை
ஒருவனிடத்திற் றுவேஷ முறுங்கால்
மனத்தை விட்டதனை மாற்றுவதற்குக்
தாமதம் வேண்டா மென்பது தருபொருள்
மித்திரரிடத்தில் வெகுளிதா னேர்ந்தால்
விரைந்தவருடனே விரோதம் வேண்டாம்
மாதாபிதாவை மாளக்கொன்றனை
உன்னுயிர் வாங்கி னுன்னைச் சேர்ந்தவர்
என்னுயிர் வாங்கவும் என்னைச் சேர்ந்தவர்
உன்றன் றமர்களை யொழிக்கவு மெண்ணுவர்
ஆதலாற்றுவேஷம் அடுக்காய் வளருந்
துவேஷம் துவேஷத்தாற்றீரா து
எனக்கென் பிராணனை யீந்தாயானும்
உன்றன் பிராணனை யுனக்கேயளித்தேன்
நம்மிருவருக்கும் நாடொறும் வளர்ந்த
பகைமை தீர்ந்தது பழகும் நண்புடையோம்
பிரீதியும் பொறுமையும் பெருமையளிக்கும்
என்றனன் காசியிறைவன் களித்துத்
தீர்க்காயுசுக்குச் செல்வியை யளித்துப்
பட்டங்கட்டிப் பாரையுந் தந்தனன்
ஆகையாலிதனை யாவருமறிந்து
வாழுமுன் வாழுமின் வாழுமின்னீரே.

ஜி. சதாசிவம் பிள்ளை,
நீலலோசனி பத்திராதிபர்.



# ஞான சாதனம்.

(98-ம் பக்கத்தொடர்ச்சி).

(2) இகமுத்திரசார்த்தப் பலபோக விராகம். இகலோக பரலோகங்களிடத்துள்ள இச்சை யொழித்தல் என்பது இதன் பொருள்.

முதற் சாதனமாகிய நித்தியா நித்திய வஸ்து விவேகத்தால், "மெய்ம்மைச் சிவமே யல்லாது விரியுமுலகம் பொய்யென்பார், இம்மை மறுமை நிலையல்லவென்ன நிகழ்ந்த கருத்தினர்." (பிரபுலிங்கலீலை) என்றவாறு, எதையறிந்தால் எல்லாமறிந்ததாகுமோ, எதைக்கண்டால் எல்லாங் கண்டதாகுமோ, எதைப்பெற்றால் எல்லாம் பெற்றதாகுமோ அத்தகைய நித்தியமான—அழிவில்லாத—சத்தியமான வஸ்துவினிடத்தே விருப்புற்று, தாரசுத தனதான்யாதி இகலோக போகங்களினிடத்தும், ஆரூத செல்வத்தரம்பையர்கள் தற்சூழ வீற்றிருக்கும் சொர்க்கம் முதலாகிய பரலோக போகங்களினிடத்தும், அவை அழிவுள்ளவையாயும், துக்கக்கலப்புள்ளவைகளாகவும், பொய்யானவைகளாகவு மிருத்தலால் வெறுப்புங் கொள்ளல்வேண்டும்.

பிறவியே துன்பத்திற்குத் தாயகமானால் இன்பமடைதலெங்ஙன்? அசுதியிற் படுத்துப் புரளுமேனம் அதையே மேலான இன்பமெனக் கருதியிருத்தற் போலவும், மலக்கிருமி அதையே மூவாமருந்தெனத் துய்த்துக்களித்தல் போலவும் சாரமில்லாத சம்சாரத்தைச் சாரமெனக்கருதி அஞ்ஞானாந்தகாரத்திலழுந்திக் கிடத்தல் தகுமோ? அவ்விக பரலோக போகங்களோ

"அடுகரி தொடரவீழ வைந்தலை நாகங்காண
இடிகிணற் றறுகின்வேரைப் பற்றிநான் றிடவவ்வேரைக்
கடுகவோ ரெலியும் வந்து கறித்திட வதினின்றூறக்
கிடைதுளித் தேனக்கின்பம் போலுமிப் பிறவியின்பம்."

என்னுஞ் செய்யுளின்படி, பயங்கரமான காட்டிற் பிரயாணஞ் செய்யுமொருவனை, யானையானது துரத்தத்தலைப்பட, அவன்

அதைக்கண்டு வெருண்டோடி இடிந்த கிணற்றருகிற் சென்றதி விழிந்து யானைக்குத்தப்ப நோக்கலும், அதனடியில் ஐந்தலை யாரா விருக்க இருதலைக் கொள்ளி யெறும்பென வதிலிழியவுமாட்டாமல் மேலே நிற்கவுமாட்டாமல், அக்கிணற்றின் கரையிற் றொங்கிக்கொண்டிருந்த அறுகம் வேரைப்பிடித்து தொங்கிக்கொண்டிருந்தான். அவ்வமயம் ஓரெலி ஓடிவந்து அவ்வேரையும் கடிக்கத்தொடங்கிற்று. என்ன செய்வான் ஏழை மனிதன்! மேலே யானை கோபத்தோடு நிற்கிறது. கீழே யிறங்குவமெனின் அங்காந்த வாயுடன் ஆவியைக்கொள்ள அரவம் அற்றம் நோக்கிக்கொண்டிருக்கிறதே யெனத் துயருழந் தண்ணாந்து அலமருங்காலை அக்கூவலின் கரையிலிருந்த பாதபத்தினின்று காற்றலைப்புண்டு சிதறியதேன் அவன்றன் தோளின்மேற்படலும் அந்நறவைத்தன் நாவால் நக்கி ருசித்து அடைந்த இன்பத்தையே யொக்கும்.

இத்தகைய, பசுத்தோல்போர்த்த புலியை யொப்பத்தன் உண்மையுருவை மறைத்துக்கொண்டிருக்கும் (துன்பத்தை உள்ளீடாகக் கொண்டுள்ள) சிற்றின்பமும். தன்னிற்றோன்றுவதே யன்றி பிறபொருள்களினின்றுந் தோன்றுவதின்றாம், ஏனெனின் ஆனந்தத்திற் குண்மையான விருப்பிடம் ஆன்மாவேயாம். இங்ஙனம் நாமாகிய வான்மாவினின்று முதிக்குமானந்தத்தை அன்னிய வஸ்துக்களி னின்றடைகின்றோ மெனல் அநேக காலமாய் மண்ணிற் புதைந்து கிடந்த வெண்பினை சுணங்கள் வருந்திக்கடிக்குங்கால், தன் பற்களிற்றோன்றுங் குருதியைச் சுவைத்து அது அவ்வத்தியினின்றுந்தோன்றிய தெனக்கருதிக் களித்தல் போலாம். நிற்க.

நாம் எண்ணிறந்த பிறவிகளெடுத்திருப்போம் அவ்வப் பிறவிகடோறும் அளவிலா வின்பங்களனுபவித்திருப்போம். எதுவும் நிலையாக நின்றதில்லை. 'போற்றிப்புனைந்த வுடம்பும் பயனின்றே கூற்றங்கொண்டோடும் பொழுது" என்றபடி, போகநுகர்ச்சிக் காதாரமாகிய சரீரமே அழியுந்தன்மைத் தெனவறிந்தபோது வேறு பொருள்களைப்பற்றி விளம்புவதென்? ஆசையே துக்கப்பிறவிக்கு வித்து. "நிராசையின்றேல் தெய்வமுண்டோ"? என்றார் தாயுமானவர். எவ்வளவுக் கெவ்வளவு ஆசையற்று பாசவைராக்



கியங்கொள்ளப்படுமோ அவ்வளவுக் கவ்வளவு துன்பமுங் குறையும்.

ஆசையறு மின்கள் ஆசையறு மின்கள்
ஈசனோ டாயினு மாசையறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வருந் துன்பம்
ஆசைவிடவிட ஆனந்தமாமே. (திருமூலர்)

பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது; பின்னது
அற்றோ ருறுவது * * * (மணிமேகலை).

இந்திரன், குபேரன் முதலான தேவர்கள் இராக்கதரா லடைந்த துன்பங்களளவற்றன வென்பது புராணேதிகாசங்களாற் புலனும். நோய், பொறாமை, காமம், மரணம் இத்யாதி யின்னல்களு முண்டானால் அவர்களின்பம் நிலைபெற்ற பேரின்பமெனப் பேசுவதெப்படி?

தீயவசுரர் பகையுண்டு செற்றமார்வ மிகவுண்டு
தோயுண்டனங்க னுருண்டு நோய்கட் கெல்லாந் தாயான
காயமுண்டு கைதொழவேண் டுனருமுண்டு கற்பகத்தே
மாயுந்தன்மை யுண்டானால் வானோர்க் கென்னை வளமுளதே.

ஆதலின் அநித்தியத் தன்மையுடைய இகபர விஷயபோகங்களினிச்சை யிம்மிமாத்திரையுமின்றி யிருத்தலின்றியமையா விரண்டாஞ் சாதனமாம்.

இங்ஙனங்கூறியதாலி யாவரும் வீடுவாசல் பெண்டுபிள்ளைகளைத் துறந்து, காட்டிற்குப்போய்விட வேண்டுமென்பது கருத்தன்று.

எத்தொழிலைச் செய்தாலு மேதவத்தை பட்டாலும்
முத்தர் மனமிருக்கும் மோனத்தே—வித்தகமாய்க்
காதிவிளையாடி யிருகைவீசி வந்தாலும்
தாதிமனம் நீர்க்குடத்தே தான்.

என்னுமாறு, எக்காரியத்தைச் செய்தாலும், எங்கேயிருந்தாலும் தாமரையிலை நீர்போல் பற்றற்று, வேடதாரியைப் போலிருத்தல் வேண்டும். சோக மோகங்களிற் கட்டுண்டிருத்தலாகாது என்பதே கருத்தாமென்க. இதற்குதாரணமாக, ஸ்ரீ பாலபோதத்துள்ள மோகஜித் (மோகத்தை ஜயித்தவர்கள்) தாயிருந்தவர்களின் கதையைக் காட்டுதல் பொருத்தமா மாகலின் ஈண்டுச்சுருக்கிக் கூறுதும்.

அரண்யவாசியாகிய யோகி யொருவர் ஆண்டுவந்த ஓரரசிளங்குமரனைக்கண்டு, 'நீயாரெ'ன வினவ, அவன் தன் பெயர் 'மோகஜித்' தென்றான். இதைக்கேட்டதிசயித்த முனிவரை நோக்கி அவ்விளங்கோ மீண்டும், 'யான்மாத்திரம் மோகஜித்தல்லன்; என் குலமுழுதும் மோகஜித்தாம்' என்றான். அதைப் பரீக்ஷிக்கக்கருதிய அவ்யோகீந்திரர் அக்குமரனது அஸ்வம் வஸ்திரம் சஸ்திர முதலியவற்றைக் கொடுபோய் அவன தரண்மனைத்தாசியைக்கண்டு 'இளவரசன் காட்டிற் சிங்கத்தால் கொல்லப்பட்டிறந்தா' னென்றனன். அதனைக்கேட்டுத்தாசி, 'சுவாமி! அவ்விராஜகுமாரனுக்கு யானடிமையு மல்லேன் எனக்கவ னிறைவனுமல்லன். ஓடத்தினாலாம் பயன் கடலைக்கடத்தலே யன்றி வேறியாது,' என்று உத்தரஞ் சொன்னாள். மீண்டும், அந்த யோகி அவன் மனைவியிடஞ் சென்று கூறினர். அவளும், 'முனிவரே! அவருடைய சேர்க்கை எனக்கு இப்பிறவியில் இந்நாள் வரையுமே பொருந்துந் தன்மையதா யிருந்தது. அந்தோ! முனிவரே! தன்னுடைய தல்லாததைத் தனதென்னும் மமகாரவாய்ப்பட்டு மாழ்கி இதற்காக இவ்வளவு தூரம் வந்தீர்களே' என்று விடை பகர்ந்தாள். பின்னர், அந்த யோகியானவர் அவன் தாயை யண்மி, அவ்வாறே யறைய அவளும் சிறிதும் சோகமோகமின்றிச் 'சுவாமின்! இரவில் விருக்ஷத்தினிடம் வந்துசேர்ந்த பறவைகள் விடியிற்காலையில் அத்தருவைவிட்டு நீங்குமன்றோ?' என்றாள். மேலும் அத்தவசி அரசனைக்கிட்டி விஷயத்தைக் கூறினான். அதைச் செவியுற்ற வரசன் பாதையினருகிலுள்ள தடாகக்கரையிற்றங்கிய வழிப்போக்கர் ஆண்டே தங்கியிருப்பரோ? தத்தம் நெறிபிடித் தேகுவான்றோ? இதற்காகக் கவல்வதேன்', என விடையிறுத்தான். முனிவர் மனமிகமகிழ்ந்து யாவரையும் விளித்து, 'இராஜகுமார னிறந்தானெனப் பரீக்ஷார்த்தமாகப் பகர்ந்தேன் அவன் சுகமே யிருக்கிறான்' என்ன, அவர்களும் அதன் பொருட்டுக் களிப்படையாமல் 'அங்ஙனமாயினும் நலமே' என்றுகூறிச் சமத்தன்மையிலிருந்தனர். பின், அந்த யோகி ராஜகுமாரனைச் சேர்ந்து, 'உன்னரசை வேற்றரச னபகரிக்க நின்பெற்றோர் சிறைப்பட்டனர்' எனக்கூற, அவனும் வருத்தமின்றி,' எத்தனை காலமாயினும் ஒருவரை ஒருவர் விட்டுப்பிரிய



வேண்டியதே. 'தந்தைதாய் தமர்தாரம் மகவென்னு மிவை சந்தைக் கூட்டமென்பதை யறிந்து, பற்றற்றிருக்கிறேனாகலின் யான் வருந்தேன்' என்றனன். முனிவரும் அவனைச் சிலாகித்தார்.

இக்கதையால் நாம் மனைவி மக்களோடு இல்லற நெறியினின்றிருப்பினும் பற்றற்று இருத்தலத்தி யாவசியமென்பது பெற்றாம். இஃதே விராகம். (விராகம்—ஆசையின்மை.)

இவ்விராகம் (1) யதமானம் (2) வியதிரேகி (3) ஏகேந்திரியம் (4) வசீகாரமென நான்கு வகைப்படும்.

(தொடரும்).

பூ. ஸ்ரீநிவாசன்,
தமிழ்ப்பண்டிதர், இராணிப்பேட்டை.

## ஸ்ரீயுத சித்தரஞ்சன தாஸர்.

(198-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

இந்தியன் நேஷனல் காங்கிரஸ் விஷயத்தில் இவருக்கு மிக ஊக்கமுண்டு. 1917-ம் வருஷத்தில் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மகா கூட்டம் சிறப்பாய் நடைபெற சித்தரஞ்சன தாஸர் எடுத்துக்கொண்ட ஸ்ரமத்துக்கு அளவில்லை. செலவழித்த பணத்துக்கும் அளவில்லை. இந்தக் காங்கிரஸ் முதல் சித்தரஞ்சன தாஸர் பெயர் இராஜீய விஷயங்களில் முதன்மையாக வெளி வரலாயிற்று. வெகு ராஜீய ஸம்மந்தமான கேசுகளில் பணம் இல்லாமலே குற்றவாளிகளுக்கு ஆஜர் ஆகி அவர்களை விடுதலை யாகுமாறு செய்திருக்கிறார். இந்தியாவிற்கு வந்த மந்திரி மிஸ்டர் மாண்டேகு கல்கத்தா சென்றபோது, வங்காள மாகாண காங்கிரஸ் கமிட்டியின் தலைமையாக இருந்து தாஸர் ஒரு பெரிய யாதாஸ்து எழுதி மந்திரியிடம் கொடுத்தார். பம்பாயில் 1918-ம் வருஷம் நடந்த விசேஷ காங்கிரஸ் மகா நாட்டில் ஜனாப் ஹாஸன் இமாம் அக்கிராசனம் வகித்தபோது சித்தரஞ்சன தாஸர் வங்காளமிருந்து வந்து தமது அபிப்பிராயங்களை வெகு கம்பீரத்துடனும் ஆதாவுகளுடனும் எடுத்துப்பேச லோகமான்ய திலகரும் கூட சித்தரஞ்

சன தாஸரிடம் வெகு வியப்பும் மரியாதையும் காட்டினாரென்றால் நாம் கூறுவதென்? சித்தரஞ்சன தாஸர் லோகமான்ய திலகரிடம் அத்யந்த பக்தி விச்வாஸம் காட்டினார். அதே வருஷம் கடாசியில் இந்தியன் நேஷனல் காங்கிரஸ் மகாநாடு டில்லிமாநகரில் கூடிய போது இவர் ஒரு சிம்மமென விளங்கினார். அந்த காங்கிரஸில் நடைபெறக் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களில் இளவரசர் இந்தியாவுக்குவரக் கேட்டுக்கொள்ளுவதென்பது ஒன்று. மிஸஸ் பெஸண்ட் இந்த தீர்மானத்தை சபையார் முன் கொண்டுவர, தாஸர் அத்தீர்மானத்தை எதிர்த்துப் பேசி காரணங்கள் ஒன்றன்பின் ஒன்றாய்க்கூறி கடாசியில் அத்தீர்மானம் நடைபெறாமல் போய் விட்டது.

மகாத்மா காந்தியால் கைக்கொள்ளப்பட்ட முறையான ஸத்யாக்ரஹத்தை தாஸர் மிகவும் ஏற்றுக்கொண்டு உழைத்தார். பஞ்சாபில் நடைபெற்ற சம்பவங்கள் அணியணியாக இங்கு எழுத வேண்டியது அவசியமில்லை யாயினும் சற்று குறிப்பில் கூறவேண்டுவது முக்கியமே. பாஞ்சாலத்தில் அதிகார வர்க்கத்தினர் செய்த முறைகளும், நிராயுதபாணிகளாயும் திக்கற்றவர்களாயு மிருந்த பல்லாயிரக்கணக்கான ஆண், பெண் இருபாலர்களும் சிறுவர், சிறுமிகளும் ஜாலியன்வாலாபாக்கில் வெடி குண்டால் உயிர் துறந்ததும், கல்னல் ஜான்ஸன், பாஸ்வெல் ஸ்மித் (Colonel Johnson, Boswell Smith) முதலியவர்களால் நடத்தப்பட்ட ராணுவச் சட்டத்தையும், அச்சட்டத்தை உபயோகித்த கொடூர முறையையும், அப்பிரதேசத்தில் இருந்த ஜனங்களை அவமானத்துக்கும், எளனத்துக்கும் உள்ளாக்கக் கூடிய விதமாய் நடந்துவரவும், தவழ்ந்துவரவும், உத்திரவு செய்யப்பட்டதும், அவ்விடம் உள்ளமனிதர் ஜீவஜந்துக்கள் என்று கூட மதிக்காமல் அதிகாரத் தலைவரான ஸர் மைக்கேல் ஓட்வியரும் அவர் சிஷர் ப்ருகடீயர் டையரும் (Sir Michael O'Dwyer, Brigadier Dyer) ஹிம்ஸித்து நடத்தி வந்ததையும், பகிரங்கமாக பல பெரிய பாரதமக்களை சவுக்கடி யடித்ததையும், பிறகு விசாரணைக்காலத்தில் இந்த டையர் தன்கையில் குண்டுகள் இருக்கும் வரையில் சுட்டதாகவும் குண்டுகள் அதிகமா யில்லாததால் அதிகம் சுடப்படாமற் போனதற்கு துக்கித்ததையும், தலைமை வகித்த அதி



காரிகள் பூசிமெழுகினதையும், அந்த பாகத்து ஜனங்கள் அனைவரும் அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீருடனும், சிந்திய மூக்குடனும் இருந்ததையும் படியாதார் இல்லை.

இச்சம்பவங்கள் நடக்கும்போது தாம் நேரில் சென்று தன்னாலான சாதனம் ஜனங்கட்கு செய்யவேணு மென்ற எண்ணம் உண்டாகி பாஞ்சாலநோக்கி புறப்பட தாஸர் தயாரானார். அதிகாரிகள் இவரை போகவிடாமற் றடுத்து விட்டார்கள். இச்சம்பவங்களை யெல்லாம் விசாரணை செய்ய காங்கிரஸ் சபையார் ஒரு விசாரணை கமிட்டியை ஏற்படுத்தினார்கள். மகாத்மா காந்தி அதன் தலைமை வகித்தார். சித்தரஞ்சன தாஸர் அதில் ஒரு மெம்பர். சுமார் 1,700 ஜனங்களை விசாரித்து, சுமார் 650 பேர்களிட மிருந்து வாக்கு மூலங்களும் வாங்கப்பட்டது. இந்த கமிட்டியின் குறிப்பு வெகு சவிஸ்தாரமாயும் ஆக்ஷேபிக்கத் தகாததாயு மிருக்கிறது.

1919-ம் வருஷம் அமிர்தஸரஸில் கூடின இந்தியன் நேஷனல் காங்கிரஸில் சீர்திருத்த சம்மந்தமான தீர்மானம் விஷயமாக இவருக்கும் மகாத்மா காந்திக்கும் அபிப்பிராய பேதம் உண்டாயிற்று. பிறகு கல்கத்தாவில் கூடிய விசேஷ காங்கிரஸ் மகாசபையிலும் மகாத்மா காந்தியால் கொண்டுவரப்பட்ட ஒத்துழையாமைத் தீர்மானத்தை அக்காலத்தில் எதிர்த்து நிறைவேறாம லிருக்கும்படி ஸ்ரமம் எடுத்துக்கொண்டார். ஆனாலும் அத்தீர்மானம் நிறைவேறப் பட்டவுடன் தமது அபிப்பிராயம் எப்படியிருப்பினும் அந்த மகா சபையில் நிறைவேற்றப் பட்டதால் அத்துடன் தாமும் ஒத்து நடக்கவேணும் என்று தீர்மானித்தார். இத்தீர்மானத்தின்படி தமது பாரிஸ்டர் வேலையை விட்டுவிட்டார். இதுவரையில் வீட்டிலும், வெளியிடங்களிலும் மேனாட்டு நாகரீகத்தைக் கைக்கொண்டு அன்னிய தேச உடை அணிந்திருப்பதை விட்டுவிட்டார். அதிக லேசான உடுப்பணிந்து வந்த இவர் கதர் உடைகளை அணியலானார். ஆங்காங்கு தமது உபன்னியாஸங்களைச் செய்து ஜனங்களுக்கு ஒத்துழையாமையின் அவசியத்தையும் இந்து முகமதிய ஐக்கியத்தின் இன்றியமையாததையும், சுதேசியத்தைக் கைக்கொள்ளும் முக்கியத்தையும் பரவச்செய்தார். வங்காளத்து மாகாண காங்கிரஸ் கமிட்டியின் அக்கிராசனம் பூண்டார்.

(தொடரும்.)

ஒரு தமிழன்.

# மதுரா—Muttra.

இப்புவியின்கண் அவதரிக்கும் எல்லா ஜீவராசிகளிலும், மிக மேன்மையானதென்றும், அடைவதற்கரிதென்றும் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது இம்மானிட ஜென்மமே. இம்மானிடப் பிறவியில் பல வருணத்தவர்களிருப்பினும், எல்லா மதஸ்தர்களாலும் ஒப்புக்கொள்ளக்கூடியது ஒரு பரம்பொருளே. ஆனால் அவரவர்கள் தங்கள் தங்கள் மதாசாரப்படியும், அனுஷ்டானத்தை ஒத்தும் அவ்வொன்றாகிய பரம்பொருளை ஒவ்வொரு ரூபமாகவும், வெவ்வேறு நாமமாகவும் போற்றி முத்தி பெறுங்கால் அப்பரம்பொருளையே அடைகின்றார்கள். இதற்கு திருஷ்டாந்தமாக ஒரு ஊருக்குச்செல்ல அநேக மார்க்கங்களிலிருந்து அவரவர்கள் தங்கள் தங்கள் மனதிற்கேற்ற பாதையை அனுஷ்டித்துக்கொண்டு இறுதியில், எல்லோரும் தாங்கள் முதலில் உத்தேசித்து புறப்பட்ட ஊரை அடைகிறார்கள். அதுபோல் ஹிந்து மதஸ்தர்கள் தங்கள் தெய்வமாகிய அப்பரம்பொருளை படைத்தல், காத்தல், அழித்தல் என்னு மதிகாரத்திற்கேற்ப ப்ரும்மா, விஷ்ணு, ருத்ரன் என்று நாமமிட்டு பஜித்து வருகிறார்கள். இதில் காத்தல் தொழிலுடைய விஷ்ணு புவியில் ஜெனிக்கும் மானிடர்களின் சுபாவத்திற்கேற்ப துஷ்டர்களை நிக்ரஹித்து, பக்தர்களான சிஷ்டர்களை காக்கும் பொருட்டு, இப்புவியில், அத்துஷ்டர்கள் பெற்றிருக்கும் வரங்களுக்கு பங்கமேற்படாமல் சமயத்துக்கு தக்கவாறு ரூபத்துடன் அவதரிக்கிறார் என்பது எல்லோரு மறிந்ததே. இதனை நிரூபிக்கும் பொருட்டே தச அவதாரங்கள் விஷ்ணு எடுத்தாரெனக் கூறப்பட்டுளது. இதனையே பகவான் கிருஷ்ணாவதாரமெடுத்து அர்சுனனுக்கு கீதை உபதேசம் செய்த சமயத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார். அத்தகைய அவதாரங்களில் முக்கியமானதென்று கூறப்படும் ராமாவதாரத்தில் மனிதர்கள் அனுஷ்டிக்கவேண்டிய முறைகளைத் தானே அனுபவித்துக்காட்டியதாகவும், அவ்வவதாரத்தில் வாக்களித்ததை நிறைவேற்றுமாறு கிருஷ்ணாவதாரமெடுத்ததாகவும் புராணங்கள் கூறுகின்றன. ஒவ்வொரு அவதாரத்திலும்



தான் கொண்ட எண்ணத்திற்கேற்ப தக்க ஊரிலோ அல்லது அரச வம்சத்திலோ அவதரிப்பது வழக்கம். அதுபோல் இக்கிருஷ்ணாவதாரமும் வடக்கே மதுரா என்னும் ஊரில் தேவகி, வசுதேவர் இவர்களுக்கு புத்ரனாக அவதரித்ததாக சொல்லப்படுகிறது.

தேவகியின் சகோதரனான கம்சனால் சிறையில் அடைக்கப்பட்டிருக்கையில் பகவான் அச்சிறையில் கிருஷ்ணாவதாரமெடுத்ததாகவும் தெரிகின்றது.

இப்புண்ணிய க்ஷேத்திரத்தை யமுனை என்னும் நதி ஓடிச் சிறப்பிக்கச்செய்கின்றது. இந்நதியில் வருஷம் பூராவும் ஜலம் ஓடிக்கொண்டிருக்கின்றது. இந்நதி ஓரங்களில் அநேக தர்மசாலைகள் (யாத்திரிகள் தங்குமிடம்) இருப்பதால் யாத்திரிகள் தங்கள் அனுஷ்டானங்களை சிரமமின்றி செய்து முடிக்க சௌகர்யமாகவிருக்கின்றது. நம்மூர்களில் கர்மாக்களை செய்து வைக்க சாஸ்திரிகள், புரோகிதர்களிருப்பதுபோல் அங்கிருப்பவர்களுக்கு பண்டாக்களென்று பெயர். புதிதாகப்போகும் யாத்திரிகர்களுக்கு இவர்கள் வேண்டிய உபகாரம் செய்து வருகிறார்கள். இந்நதியில் ஆமைகள் அதிகம். சாதாரணமான ஆமையின் முதுகு சுமார் இரண்டடிக்குக் குறையாமலிருக்கும். இப்பட்டணத்தின் அமைப்பு புராதனமானதாகவேயிருக்கின்றதேயன்றி தற்காலத்திற்கேற்றவாறு அமைக்கப்படவில்லை. இது ஒரு முனிசிபல் ஊர்தான். இப்புண்ணிய க்ஷேத்திரத்திலிருப்பவர்கள் தெய்வபக்தியுள்ளவர்களாயிருப்பது ஓர் ஆச்சரியமல்ல. இங்கு குரங்குகளின் உபத்திரவம் சொல்லுதற்கொணாது. யமுனா நதியிலிருந்து 1½ மயில் தூரத்தில் பூதகி தடாகமென்று ஒரு பெரிய அழகான தடாகமொன்றிருக்கின்றது. இதை புண்ணிய தீர்த்தமென்று சொல்லுவதால் அநேக ஜனங்கள் அங்குசென்று அக்குளத்தில் நீராடி வருகிறார்கள். இக்குளத்திற்கு சமீபமிருக்கும் ஒரு சிறு குன்றின்மேல் விஷ்ணு அவதாரமெடுத்ததாகச் சொல்லப்படும் கோவில் ஒன்று இருக்கின்றது. இவ்விடத்தில் தேவகி, வசுதேவர் இவர்களுக்கு விலங்கிடப்பட்டும், ஸ்ரீ கிருஷ்ணபகவான் பால ரூபமாகவிருக்கும் ஆகிருதத்தைக் காண்பிக்கக்கூடிய ஒரு கோயில் இன்னும் அங்கிருக்கின்றது. இதற்கு சமீபம் அதேகுன்றின் மீது மசூதி ஒன்று கட்டப்பட்டிருக்கின்

றது. இந்தியாவில் முன் மகமதியர் அரசாண்ட காலத்தில் இம்மசூதி கட்டப்பட்டதாக சொல்லுகிறார்கள். பகவான் ஆயர் குலத்திலவதரித்து கோக்களை பரிபாலித்து வந்தார் என்ற விஷயம், இந்நகரிலிருக்கும் எல்லாவிதமான மாடுகளை நோக்குங்கால் நன்கு விளங்கும். இதனால் தயிர், பால், நெய் முதலியவைகளுக்குக் குறைவின்றியும், ஜனங்கள் நல்ல சுக ஜீவினர்களாகவு மிருக்கின்றார்கள். இந்நகரின் மத்தியில் துவாரகநாத் ஆலயமொன்றிருக்கின்றது. அலங்காரப்ரியோ விஷ்ணு என்பது இவ்வாலயத்தால் நிரூபிக்கப்படுகின்றது. நம்மூர்களிலுள்ள வழக்கம்போல் கோவிலுக்கு தேங்காய், பழம் முதலியவைகள் எடுத்துச்செல்லும் வழக்கமங்கில்லை. அவ்வாலயத்திற் குரித்தானது, தரிசனமும், பஜனையுந்தான். ஒவ்வொரு காலங்களிலும், அப்பெருமானுக்கு ஒவ்வொரு அலங்காரம் செய்யப்பட்டு வருகின்றது. அவ்விடத்தில் ஜனங்களுக்கு ஜாதிவித்தியாசமே கிடையாது. எல்லோரும் ஒன்றாகச்சேர்ந்து தரிசனம், பஜனை செய்வது வழக்கம். இஷ்டமுள்ள ஜனங்கள் தங்களால் இயன்றளவு காணிக்கை செலுத்த ஓர் உண்டியல் அங்கு வைத்துளது. தெற்கே சில க்ஷேத்ரங்களிலுள்ளது போல் அவ்விடத்தில் இவ்வளவுதான் போடவேண்டுமென்றும், தரிசனத்திற்கு இவ்வளவு கொடுக்கவேண்டுமென்ற கண்டிப்புக் கிடையாது. உண்டியல்போட்டவர்களுக்கும், போடாதவர்களுக்கும் வித்தியாசமே கிடையாது. இதனை நோக்குங்கால் ஈசன் எல்லோரிடத்தும் பக்ஷபாதமின்றி ஒரேவிதமாக விளங்குகின்றார் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கு விளங்கும். இவ்விடத்திலுள்ள ஜனங்கள் ராதையைத்தான் போற்றிவருகிறார்கள். ருக்மணி என்ற நாமத்தைக்கூட அவர்கள் மறுக்கின்றார்கள். சதா "ராதேசம்", "ராதேசம்" என்றுதான் பஜித்து வருகிறார்கள். இதனால் பக்தி குறைவென்று எண்ணுவதற்கில்லை. அவரவர்கள் தங்கள் தங்கள் அனுஷ்டானங்களை ஒத்து போற்றி வருகிறார்கள்.

பகவான் தான் பால்யகாலத்தை கழித்த இடங்களாகிய கோகுலம், கோவர்த்தன், பிர்ந்தாவானம் என்னும் க்ஷேத்ரங்களைப் பற்றியும், கீதையை உபதேசித்த இடமாகிய குருக்ஷேத்திரத்தை பற்றியும், இனிவரும் சஞ்சிகைகளில் காணலாம்.

R. நாகராஜன்,
புதுக்கோட்டை.



# கல்வி.

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்பது நம் தமிழ் மூதாட்டியின் வாக்கியம். இது அவள் முருகவேளுக்குக் கூறியதாகும். அவளது வாக்கிற்கொப்ப, மக்கள் யாக்கையில் பிறப்பது அரிதினும் அரிது என்பதை எவரும் மறுக்கொணாது. ஆரவம் பரிக்கும் இவ்வவனியின்கண் அரைவனால் ஆக்கப்பட்ட எண்பத்து நான்கு நூறாயிரம் ஜீவராசி பேதங்களுள், மூவிரறிவுடைமாந்தர் பிறவியே சாலச்சிறப்புடைத்தாம். ஆறறிவுடை மக்கள், தேவர் உயர்திணையின்பாற்படுவர். ஏனையவிலங்குகள், ஊர்வன, பறப்பன, நீர்வாழ்வன ஆகிய இவையாவும் அஃறிணையின்பாற் சேரும். உயர்திணைப் பொருள்களாம் மாந்தரும், அமரருமே, கைவல்யத்தை எளிதில் சாதித்துக்கொள்ளவேண்டியதற் கனுகூலமான சாதகங்களைப் பெற்றோர். உயர்பதவியாம் வீடடைவதற்கு உரியோர் அவரே என்பதை, அவர்கள் அகல்விசும்பை எளிதின் கண்ணுறக்கூடிய சக்தியுடையோர்களாயிருத்தலால் அறிக. இவ்வாறே மிருகமாதி அஃறிணை ஜீவவர்க்கங்கள் தரையை நோக்கிய வண்ணம் அலைந்து திரிந்து உழலுவதால், பேரின்பவீட்டைப் பற்றிய ஞாபகமே அவைகளுக்குச்சிறிதும் கிடையாது என்பதையும் உணர்க. ஆனால் அவைகள் தம் நடக்கையில் தூய்மையை அனுசரிப்பின், படிப்படியாய் உயர்ந்த ஜன்மங்களடைந்து, கடைசியில் பெறற்கரிய மானிடப்பிறவியை அடையும் நம் முன்னோர்களாகிய ரிஷீஸ்வரர்கள், மாந்தரும், இவைகளைக் கடைத்தேறும்படி செய்யவல்ல முறைகளை அனுட்டிக்கும் வண்ணம் பற்பல ஏற்பாடுகளைச் செய்துள்ளார்கள். இவைகள் பெரும்பாலும் அந்தணருக்கும், சிறுபான்மை அன்னோரல்லாத மற்றையோருக்கும் உரியன. விப்பிரருள் ஆதிகால முதல்கொண்டு கையாடப்பட்டுவரும் ஆபோஜனம் முதலிய கிரியைகள், ஈ எறும்பு முதலிய சனஜந்துக்களை உயர்பிறவி அடையும்படி செய்யவல்லன. உண்டி கொண்டபின்பு ஒரு சிறு கவளம் அன்னத்தோடும், இலையை வெளியில்கொண்டு போய் எறியும்படி, இன்றும் நாளும் ஆன்றோர் கழறுவனத நாம்

கேட்கலாம். இது எதற்காக? இதன் உண்மையான இரகசியத்தைப் பெரும்பான்மையோர் அறியார் என்பதே எமது துணிபு. அதன் உண்மையைச் சிறிது கூறுதும். மனிதன் உண்டு எஞ்சிய உணவில் அவனது ஜீவஜடசக்தி அணுக்கள் நிரம்பியிருக்கும். இதைத் தின்று ஜீவிக்கும் காகம், சுவானம் முதலிய பிராணிகளின் சரீரத்தினுள் சென்று பரிணமிக்கும். அப்பொழுது இவைகளுக்குத் தமக்கு அன்னமிட்டவனை மறவாதிருக்குமாறு செய்யவல்ல உணர்ச்சியொன்று தானாகவே தோன்றும். ஆகவே அவைகள் அம்மனிதனை மறவாது பிரதிதினமும் அவ்வேளையில்—உண்டபின் இலையைக் கொணர்ந்து வெளியில் எறியுந்தறுவாயில்—அவன் வீட்டின் வாயிலில் ஆவலோடும் காத்திருக்கும். கடைசியாக அந்திய காலத்தில் அவைகளுக்கு அன்னமிட்ட மனிதசொரூபமே மனதின் முன் நிற்கும். அவனையே நினைத்துக்கொண்டு அவைகள் உயிர் துறக்குமாகலின், அவைகள் மறுபிறப்பில் மானிட ஜன்மத்தை அடையினும் அடையும். ஏனெனில், அந்தியகாலத்தில் மனதில் எஞ்சியிருக்கும் நினைவே மறுபிறப்புக்கு வித்தாம். நாம் மிகவும் அற்பமாய்க் கருதும் இச்செய்கை இத்தகைய அபாரமான பலனைக் கொடுக்குமானால், இன்னும் உள்ள பிறவும் எப்பேர்ப்பட்டவையாயிருக்கமாட்டா? "மற்றொன்று விரித்தல்" என்பதின் பாற்படும் என அஞ்சி, இதை இதனோடு நிறுத்தி மேலே நாம் கூறவந்ததைப் பகர்வோம். மனித ஜன்மமே என்றும் அழிவில் பேரின்ப வீட்டை அடைவதற்குரிய முக்கிய சாதனமாகும் என்பது இது காறும் கூறியவற்றால் இனிது விளங்கும். மனிதனின் உயர்ந்தோர் தேவர். அவர்கள் இன்பநுகர்ந்த வண்ணமே இறுதியில் மென்மேலும் புரியும் புண்ணியச் செய்கைகளினால் எளிதில் முக்தி அடைவோர். முக்தி அடைதல் எனின் தேஜோமயமான சரீரத்தைப் பெற்றுப் பரம்பொருளினிடம் இரண்டறக்கலத்தலேயாம்.

இனி, உலகில் உற்பவித்த ஒவ்வொரு படைப்புப்பொருளுக்கும், அதற்கேற்றபடி பழக்கவழக்கங்கள் இயற்கையாகவே அமைந்துள்ளன. அவ்வாறே வெவ்வேறு பாஷைகளும் அவற்றினிடையே விளங்குகின்றன. அவைகள் தத்தம் உணர்ச்சியைத் தம்மினத்த



வருக்குத் தமக்கேற்பட்ட பாஷையில் தெரிவித்துக் கொள்ளுகின்றன. ஆனால் அவைகளின் பாஷையை அறியாத மாந்தர், அவைகளுக்கு உணர்ச்சி சிறிதுமில்லையென்று தம் பேதமை மேலீட்டால் கருதி, அவைகளை இன்னல்கள் பலவற்றிற்கு உள்ளாக்குகின்றனர். முன்காலத்து அரசாண்ட மன்னரிற் பலர்—உதாரணமாக விக்கிரமாதித்த அரசன்—பட்சி பாஷையும் மிருக பாஷையும் கற்றுத்தேர்ந்திருந்தனர் என்பதே அஃறிணைப்பொருள்களுள்ளும் சம்பாஷணை மனிதரைப்போலவே நடந்தேறுகின்றது என்பதற்குப் போதிய சான்றாகும். மானிடவர்க்கத்திடையே எவ்வாறு தனித்தனி பாஷைகள் வழங்கிவருகின்றனவோ, அஃதே போல், நரனினும் தாழ்ந்த ஜீவராசிகளிடத்தும் பலவகைப்பட்ட வாசகப்போக்குகள் உள்ளன என்பதை மேதையர் ஒருவரும் மறுக்கத்துணியார். இது நிற்க, மானிடர் தத்தம் பாஷைகளில் காலஞ் செல்லச்செல்ல நவநவமான சீர்திருத்தங்களை "பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவலகால வகையினானே" என்றவாறு புகவிட்டு ஒருவாறு ஏற்றத்தாழ்ச்சி பேதங்களை உண்டுபண்ணிக் கொள்ளுகின்றனர். இஃது அவர்கள் அறிவின் முதிர்ச்சியின் போக்கையே அனுசரியாநிற்கும். ஆனால் மிருகங்களுக்கோ, அன்றி எப்பேர்ப்பட்ட அஃறிணைப் பொருள்களுக்கோ இவ்வாறு செய்ய ஒருசிறிதும் இயலாது. ஏனெனில் அவை ஐயறிவுயிர்களும், அதற்கும் கீழ்ப்பட்ட அறிவுடையவைகளுமாம். பகுத்தறிவு என்பது அவைகளுக்கு அணுவளவுங் கிடையாது. ஆகவே அவைகள் ஆதிகாலந் தொடங்கி, இறைவனால் தத்தமக்குக் கற்பிக்கப்பட்ட பாஷையை யாதொரு வேறுபாடுமின்றி அனுசரித்து தம்தம் அலுவல்களைச் சாதித்துக்கொள்ளும் இயல்புடையவையாய் இலங்குகின்றன. என்றேனும் நாம் ஒரு குறிப்பிட்ட மிருகமோ, அன்றி பட்சியோ, புதிதான—அதற்கு எனவரையறுக்கப்பட்டதினின்றும் மாறான—குரலில் சப்தம் செய்வதைச் செவியுற்றதுண்டோ? அவ்வாறே அவைகள் பழக்கவழக்கங்களிலும் ஏதேனும் மாறுபாடுகள் காணக்கண்டறிந்ததுண்டோ? தூக்கணங் குருவி ஆதிகாலத்தில் எப்படிக்கூடுகட்டிக்கொண்டதோ அதுமாதிரியேதான் இப்பொழுதும் அமைத்துக்கொள்ளுகின்[illegible] [illegible]யான் என்று

JL
O31m211, N3P
N02.1.6
144200

கூறப்படும் வெள்ளெறும்புகள் நல்லமுறை நல்லமுறையாக மண்ணிலேயே வேற்றுமை சிறிதுமின்றி வீடுகட்டிக்கொள்ளுகின்றன. இவைகள் பகுத்தறியும் சக்தி இன்றி இயற்கையறிவுமட்டுமே கொண்டுள்ளதின் காரியங்களாம். இதுகாறும் கூறிப்போந்ததினின்றும் அறியக்கிடப்பது யாதெனில் மானிடன் ஒருவனே தன் பகுத்தறிவின் முதிர்ச்சியினால், காலத்திற்கேற்ற கோலப்படி தனக்கு வேண்டிய சௌகரியங்களை அமைத்துக்கொள்ளக் கூடியவனாயிருக்கின்றான் என்பதும், அவனினும் தாழ்பிறப்புடைய மற்றைய ஜீவன்கள் தத்தம் நிலை, பழக்கவழக்கங்கள், சம்பாஷணை ஆகிய இவற்றில் இம்மியளவும் வேற்றுமையின்றி வாழ்கின்றன என்பதுமே. ஆகவே ஈசுவரனால் சிருஷ்டிக்கப்பட்ட எல்லாவித ஜீவராசிகளும் தத்தமக்கென ஒவ்வொரு பாஷையைக்கொண்டுள்ளன என்பதை விளக்குவதே எம்கருத்தாம். இனி நம் வியாசத்தின் நோக்கை அனுசரிப்போம். ஒருவனுடைய சுகத்தையோ, துக்கத்தையோ, அன்றி மற்ற எவ்வித உணர்ச்சியையோ பிறரொருவருக்கு அறிவிப்பதற்கு தகுந்த பாஷையொன்று இருத்தல் வேண்டுவது அவசியம் என்பது இனி தெள்ளிதின் விளங்கும். பாஷை இருவடிவமுடையவதாயிருக்கும். ஒலிவடிவுமட்டும் கொண்டது ஒன்று. மற்றொன்று ஒலிவடிவோடு, வரிவடிவுங் கூடியதாம். ஒலிவடிவோடுமட்டுமே கூடிய பாஷை முக்கியமாய் ஆறறிவுயிரினுங் கடைப்பட்ட ஜீவராசிகளினிடையும், நாகரீக வாசனை இன்னது என்பதே அறியாத காட்டு பிராணிகளிடத்துமே காணப்படும். இத்தகைய பாஷை மனிதனின் முன்னேற்றத்திற்கும் ஒரு சிறிதும் பயவாதொழியும். நாம் இங்கு நோக்கிற்கனு குணமான வரிவடியோடுங்கூடிய பாஷையே கொள்ளல் வேண்டும். இதுவே மனிதனின் முன்னேற்றத்திற்குரிய ஓர் உயர் அருஞ்சாதனமாம். ஆகவே வரிவடிவோடுங்கூடிய பாஷையே சாலச்சிறப்புடைத்து என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. வரிவடிவம் என்பது எழுத்துக்களே. தற்காலம், தண் கடலையே ஆடையாக உடுத்த இம்மாநிலத்தில் எண்ணிறந்த பாஷைகள் வழங்கிவருகின்றன என்பது பிரசித்தம். ஆக்கியோன் அறிவு முதிர்ச்சிக்கேற்ப அவ்வம்மொழிகளும் ஒன்றற்கொன்று இலக்கிய விலக்கண



நெறிகளிற் சிறந்தும் குறைந்தும் அமைந்துகிடக்கின்றன என்பதும் வெளிப்படை. பாஷாஞானம் சித்திப்பதற்குக் கல்வி இன்றியமையாதது என்பது எவரும் ஒப்பமுடிந்த தொன்றாகும்.

"கல்வி" என்ற சொல் கற்றல், அறிவு, வித்தை எனப்பலவாறாகப்பொருள்படும் கற்றல் என்று பயனளிக்கும் சமையம் தொழிற்பெயராகவும், அறிவு, வித்தை என்று அர்த்தந்தரும் அமையம் தொழிலாகு பெயராகவும் கருதப்படும். 'பொருண் முதலாறோடளவை சொற்றானி, கருவிகாரியம் கருத்தனாதியுள், ஒன்றன் பெயரானதற்கியை பிறிதைத், தொன்முறையுரைப்பன ஆகுபெயரே" என்று ஆகுபெயரின் இலக்கணத்தை நன்னூல் கூறுநிற்கும். "கல்வி" என்னுந் தொழிற்பெயர் "கல்" என்ற பகுதியினடியாகப்பிறந்தது. பகுதி பெரும்பான்மையாய் எப்பொழுதும் ஒருமை எவல்வினை முற்றாகவே இருக்கும். "கல்லு" என்பது "கல்" என்பதின் பேதமே. கல்லுதலாவது தோண்டுதல், பறித்தல் எனப் பயன்தரும். இங்கு தோண்டுவது விஷயங்களைக்கூர்ந்து ஆராய்தல் எனவே அர்த்தம்படும். ஆகவே, "கல்வி" என்னும் தொழிற்பெயர், யாதொரு விஷயத்தை ஆழ்ந்து ஆராய்தல் என்றும், தொழிலாகுபெயர், தீர ஆராய்ந்தறியப்பட்டது ஒன்று என்றும் பொருள் பயவா நின்றன. "கல்வி" என்ற தமிழ் மொழிக்குச் சரியான வடமொழிப்பதம் "வித்யா" என்பது. இதனின்றும் ஏற்படுவது யாதெனில் விஷயங்களைச் சரிவரத் தெள்ளிதின் ஆராய்ந்தறியும் ஞானமே "கல்வி" எனப்படுவதாம். நம்முன்னோராகிய வடமொழிவாணர் இத்தகைய ஆராய்ச்சி ஞானத்தை அறுபத்துநான்கு கலைஞானங்களெனப் பகுத்துள்ளார்கள். இவ்வறுபான் நான்கினுள் பலவகைப்பட்ட கலைகளும், கைத்தொழில்களும் அடங்கும் கைத்தொழிலும கல்வியேயாம் என்பது தேற்றம். அவ்வக்கலைகளின் இலட்சணங்களை விவரித்து உரைப்பது நூலாகும். கற்றற்குரிய விஷயங்களை இது செவ்விதின் புலப்படுத்தும். "மரக் கோட்டம் தீர்க்குமதுபோல் மாந்தர், மனக்கோட்டம் தீர்க்கும் நூல் மாண்பு", அதாவது நூல் மரக்கோட்டம் தீர்ப்பதுபோல், இவை மாந்தர் மனதைச் சீர்திருத்தலால் நூல் எனவே பெயரிடப்பட்டன. ஆகவே "நூல்" என்பது உவமையாகு பெயர் என்பது போதரும்.

நனூலார் நூலின் பயனைக் கூறவந்தவிடத்து " அறம்பொருளின்பம் வீடடைதல் நூல் பயனே " என்றும், மற்றும் அதற்குரிய இலக்கணங்களையும் கூறிப்போந்தான். " நூல் " என்பதே " கிரந்தம் " என்று வடமொழியில் வழங்கப்பெறுவது. இவ்வாறே " ஆக்கியோன் " என்ற தென்மொழியாந் தமிழ்ப் பதத்திற்கு " கிரந்தகர்த்தா " என்பது வடசொல். சான்றோரால் ஆக்கப்பட்ட நூல்கள் "பொதுவில் இலக்கியம்" எனப்பெயர்பெறும். எதைக் குறித்து இலக்கணம் உரைக்கப்படுகின்றதோ அது இலக்கியமாகும். அவ்விலக்கியத்தின் அமைதியை விவரித்து விளங்க உரைப்பது இலக்கணமாம். ஆகவே இலக்கியம் என்பது இலக்கண நூற்படி முன்னோர் தந்தசெய்யுள் என நன்குபெறப் படுகின்றது. இதையே ஆங்கிலம் வல்லார் " Classical writings " எனப் புகல்வர். இதனின்றும் முற்காலத்தில் யாவும் செய்யுள் நடையிலேயே எழுதப்பட்டுவந்தன என்பதும், வசனநூல் சமீபகாலத்திலேயே தோன்றியது என்பதும் விளங்கும்.

(தொடரும்).

தமிழன்.

## ஓர் வேண்டுகோள்.

பின்வருவனவற்றை நம் " பைந்தமிழின் " மூலம் எமக்கு மேதையோர் எவரேனும் விளக்குவாராக.

" வீமனுக்கு மைந்தனார் வேதனாகும்
வேதனுக்கு மைந்தனார் ஈசனாகும்
காமனுக்கு மைந்தனார் வீமன்தம்பி
கந்தனுக்கு மாமனார் காமன்றானே
மாமனுக்கு முன்றமையன் தந்தைகாலன்
ஆகிய இம்முறை உலகத்தில் வழங்கலாலே
இராமனுக்குத் தங்கை சீதையாகவேண்டும்
இராவணனுக்குத் தகப்பன் இராமன்தானே."

**S. V. RAJAN.**



# மாருதிவிஜயம்

அல்லது

# அனும வரலாறு.

### மாருதி வணக்கம்.

அஞ்சிலே யொன்று பெற்றான்
அஞ்சிலே யொன்றைத்தாவி
அஞ்சிலே யொன்றாறாக
வாரியர்க்காகவேகி
அஞ்சிலே யொன்று பெற்ற
வணங்கைக் கண்டயலாரூரில்
அஞ்சிலே யொன்றை வைத்தான்
அவனன்மை யளித்துக்காப்பான்.

### கலைமகள் துதி.

பெருந்திருவுஞ்செய மங்கையுமாகியென் பேதைநெஞ்சில்
இருந்தருளுஞ் செஞ்சொல் வஞ்சியைப்போற்றி லெல்லாவுயிர்க்கும்
பொருந்திய ஞானந்தருமின்பவேதம் பொருளுந்தரும்,
திருந்திய செல்வந்தருமழியாப் பெருஞ் சீர்தருமே.

### முதற் கடவுள் வணக்கம்.

வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
ஊனாகி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க்
கோனாகியானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே.

## அத்தியாயம் 1.

[பிறப்பும் பாலலீலையும்].

முன்னீராடை யணிதாக்கொண்டு துலங்கு மிப்பூமண்டலத்திற்கேயொருதிலகம் போன்றதும், எக்காலும் சீருஞ்சிறப்பும் மல்கி நின்றுலவுவதுமாகிய நம்மிந்திய வளநாட்டிலே, முன்னம் ஒருகால் கேஸரி என்றும் பெயர் கொண்ட வானரனொருவன் தன்னருமைப் பாரியையாகிய அஞ்சனை யென்பாளுடன் இனிதே

வசித்து வந்தான். அவ்வாறு வசித்து வருநாளில் ஒரு நாள், அவ்
வஞ்சனை வாயுதேவனைக்கண்டு காமுற அத்தேவனும் தன்னாற்ற
லால் அவளுக்கு ஒரு புத்திரனை யனுக்கிரஹித்துப்போயினான். சின்
னாட்சென்ற பின்னர் அவளுக்கு ஆஞ்சனேயனென்ற ஒரு புத்தி
ரன் பிறந்தான். அக்காலை அவனது பேருருவையும் அதற்கி
யையுமாறிருந்த திடத்தையுங்கண்ட வானோர், தம்மை யரக்கர்
களின் துன்பத்தினின்றும் விடுவிக்கவல்ல அற்புத பானு அவ்வஞ்
சனை வயற்றி லுதயமாயினனென்று ஆனந்தித்துப் பேராரவாரத்
துடன் மலர்மழை பொழிந்தனர். துந்துபி முதலிய பலவித விசைக்
கருவிகளையும் இசைத்தனர்.

நிற்க, அஞ்சனாதேவியின் அருமைப் புதல்வனாகிய ஆஞ்ச
னேயன் பிறந்தவுடனே பசிப்பிணி பொறுக்கலாற்றாது, கூகா
வென்று கதறலாயினன். அது கண்ட அஞ்சனாதேவியும் சிவந்த
நிறம்வாய்ந்த பலவிதக் கனிகளைக் கொணருவதாகச் சொல்லிப்
போயினள். இதற்குள், முழுமுதற் கடவுளை பூவுலகமாக்களின்
அஞ்ஞான விருளைப்போக்க வந்தாலென்னக் கீட்டிசையிற் பகல
வன் தன் வெய்ய கிரணங்களைப் பரப்பி வரலாயினான். சூரியனது
சிவந்த கிரணங்களைக் கண்ணுற்ற வாயுபுத்திரன், அச்சூரியனையும்
தந்தாய் சொல்லிய கனிவகைகளிலொன்றாக்கொண்டு, குபீலெ
னப்பாய்ந்து, அவ்வுதயபானுவை பிறகப்பற்றினார்.

இஃதிவ்வாறாக, கிரகணகால மணுகியும் சூரியனை விடா
தொழிந்த மாருதியின் செயலைக்கண்ட இராகு, தேவர்கோனிடம்
ஓடோடியுஞ்சென்று, அவனது அடியிணைகளைப்பற்றி, "ஏ, வள்
ளலே, தேவர்க்கிறையே! தாமிதுகாறும் சூரிய சந்திரர்களைக்
கிரகண காலத்திற் பிடிக்க எனக்கன்றோ உரிமையளித்திருந்தீர்.
இப்பொழுது அவ்வுரிமையை விலக்குமாறு யான் செய்த குற்றந்
தானென்னோ? ஐயனே பொறுத்தருளும். அடியேனைக் காத்
தருள்வீர்" என்று இரங்கிக் கூறுவாறாயினான். கூறுதலும் வாச
வன் தனது ஈரிருமருப்புடைய ஐராவதத்தைக் கொணருமாறு
ஆஜ்ஞாபித்துப் பின்னர் அஃதூர்ந்து சூரியனிருக்குமிடஞ் சேர்ந்
தான். ஆஞ்சனேயனைக் கண்டதும் இந்திரனுக்குச் சீற்றம் மிகுத



லாயிற்று. கடைக்கண்கள் சிவக்க, மிகுந்த கோபக்குறியுடன்
இராகுவை நோக்கி, "நீ இப்பொழுது போய்ச் சூரியனைப்பிடி.
நான் உன்னைக்காத்து நிற்கிறேன்" என்றனன். அவனும் அப்
படியே சூரியனைப் பிடிக்கச்செல்வதைகண்ட ஆஞ்சனேயனும்
இராகுவின் கவுளில் ஓங்கி யறைந்து அவனையனுப்பி, பக்கத்தில்
திரும்பிப்பார்க்க, அழகிய சிந்தூரத்திலகம் தீற்றிய இந்திரனது
சுவேதவாரணத்தைக் கண்டு அதன் திலகத்தையும் ஒரு கனியாக
வெண்ணி அதன்மேற் பாய்ந்தான். அதுவே தக்கவமய மெனக்
கொண்டு அம்மகவான் ஆஞ்சனேயனின் கவுளில் தனது வச்சிராயு
தத்தினால் ஓங்கியடித்தான். அது பொறாது அனுமான் (ஹனு-
கவுள்; கதுப்பு) மூர்ச்சையடைந்து அடியற்ற மரம்போற் பூமியிற்
சாய்ந்தான்.

இந்தச்செய்தி சீக்கிரத்திலேயே வாயுதேவனுக்கெட்டியது.
அது கேட்டவுடன், அவர் மென்மையான தேகம் படைத்த புழு
வைப்போற் துடித்துப் பதைப்புடன் தேவேந்திரனிடம் சென்று,
"ஓ இந்திரா! உனது ஆயுதச் செருக்கினாலோ, அன்றி உனது
படைத்திறத்தினாலோ நீ யென்றனருமை மைந்தனைக்கொன்றனை?
உனது கருவத்தை அடியுடன் போக்குகின்றேன்; கணத்துள் பார்
என்றன் வீரியத்தை:" என்று சினந்து மொழிந்து, ஆஞ்சனேய
னைக்கையி லன்புடனேந்தி, மூவுலகத்துயிர்களும் நாசமாம்படி
தமது சுவாசத்தைத் தம்முள்ளேயடக்கி இமாசலத்திலமைக்கப்
பெற்ற பெரியதோர் பிலத்துட்புகுந்தான். அப்போது சகல ஜீவப்
பிராணிகளும் சுவாஸிப்பதற்கின்றி வயிறு வீங்கி உயிர் துறக்கலா
யின. சில நாழிகைகட்குள் ஹோமம் வேள்வி முதலிய கிரியைகள்
யாவும் நின்றுவிட்டன.

இவையெல்லாங்கண்ட தேவர்களும் இருடிகளும் ஒருங்கே
மறைமுதற்கிழவன் திருமுன்னர்ப்போந்து, "ஏ சர்வேசா! அகில
புவனங்களைச் சிருட்டித்தவற்புதத்தேவனே! நின்னையன்றி எங்
கட்கு அடைக்கலம் வேறுண்டோ? தேவாதிதேவனே! நாங்கள்
யாவரும் துன்புறுவதையறியீரா? வாயுதேவன் மைந்தனாகிய ஆஞ்
சனேயனை, இந்திரன் குலிசத்தினாலடிக்க, அச்சிறுவன் மூர்ச்சையுற்

றுக் கீழேவிழுந்தான். அதனால் வாயுதேவன் கோபங்கொண்டு எங்கும் அணுவளவு வாயுவும் இல்லாமற்செய்து இமயமலைக்குகை யொன்றனுட் புகுந்துள்ளனன். இன்னும் சிறிதுநேரம் காற்றில்லாதிருந்தாலும் உலகத்தின்கண் ஹோமம் வேள்வி முதலிய நற்கிரியைகளொன்றையுக் காணவியலாது. தவிர, அமரரும் துன்புறுவர்" எனச்சொல்லி முறையிட்டனர்.

அதுகேட்ட வப்பிரமனும் சிறிதுந்தாமதியாது பூவுலகஞ் சேர்ந்து, வாயுவிருந்த குகையுட்புகுந்து மூர்ச்சையாயிருந்த ஆஞ்சனேயனை யன்புடன் தடவிக்கொடுத்துத் துயிலெழுந்தவன்போலெழச்செய்து, தேவர் கோனாதியாயுள்ள எல்லாத் தேவர்களையும் அவரவர்க்கியன்ற வரங்களை யனுமனுக்களிக்குமாறு கட்டளையிட்டனன்.

அவ்வாறே இந்திரன் முன்னர் வந்து, "எனது வச்சிராயுதத்தினாலும் மற்றெவ்வகைப்படைக் கலத்தினாலும் இவனுக்கு மரணம் நேரிடாதிருக்கக்கடவது. என் வச்சிராயுதத்தினாற் கவுள்முறிந்த இவனுக்கு இனி 'அனுமான்' எனும் பெயர் உண்டாகக்கடவது. இவன் உலகில் மிகுந்த புகழுடன் வாழ்ந்துவரக் கடவன்" என்று சொல்லி ஒரு பொற்றாமரை மலரையும் அவனுக்களித்தனன். பின்னர், சூரியன், இவனுக்கு என்னுடைய கிரண வொளியில் நூற்றிலொருபாகத்தை யான் கொடுத்தேன். இன்னும் யான் அவனைத்தக்க காலம் வருங்கால் சகல சாத்திரங்களிலும் நிபுணனாக்குவேன்" என்றும், வருணன் தனது ஒப்பற்ற பாசம் அனுமானைப் பிடிக்காதென்றும் இயமன் தனது காலதண்டம் அவனை மரணத்திற்குள்ளாக்காதிருக்கக் கடவதென்றும், குபேரன் தனது கதையாலவனுக்குச் சாவுநேராதென்றும், பின்னும் போரில் இளைப்பும் நோயும் ஏற்படாதிருக்கக்கடவனவென்றும், உருத்திரமூர்த்தி தம்முடைய சூலம் அவனுக்குத் தீங்கு செய்யாதென்றும், அசுவினி தேவர்கள், ஒருவிதமான நோயும் அவனை யணுகாதென்றும், சொல்லித் தத்தமுலகுக்கேகினர்.

இறுதியாக, பிரமதேவன் இவன் எனது பிரம தண்டத்தினால் நாசமடையாதிருக்கக் கடவன். இவன் எந்த அஸ்திரத்தினாலும்



மரணமடையாதிருக்கக்கடவன். இவன் தீர்க்காயுளையும் பேரியல்
பையும் பெறட்டும் "என்றருளிப் பின்னர் வாயுதேவனை நோக்கி"
ஏ தேவனே! இனி இவனால் உலகத்துக்கே பெரியதோர் நன்மை
யுண்டாக விருக்கிறது. இவன் ஆதியந்தமற்ற வற்புதக்கடவுளா
கிய ஸ்ரீ ராமமூர்த்தியின் சீரடியிணைகளைப் போற்றி அவருக்கு எவ
ருஞ் செய்தற்கரிய தொண்டியற்றி, இரவி யுள்ளளவும் மாறாப்
புகழ் பெற்றுச் சிரஞ்சீவியாய் வாழ்ந்து வருவன். யான் சென்று
வருகிறேன். நீமனச் சமாதானம் அடைவாயாக" வென்றுசொல்
லித் தம்முலகு மீண்டனன். வாயுதேவனும் அனுமானை அஞ்சனை
யிடஞ் சேர்த்து நடந்த செய்திகளை அவளிடம் நிகழ்த்திப் போந்
தனன்.

இவ்வாறு பிரமதேவனாதியாயுள்ள தேவர்களிடம் வரம்பெற்ற
வனுமான் தனக்கு நிகரொருவருமிலரென்ற செருக்குப்படைத்து,
நெறிதவறாது கடவுளை யேற்று வழிபட்டுவரும் முனிவரர்க்கு
இடையூறு செய்யத் தொடங்கினான். தபோதனர்களாகிய முனிச்
சிரேட்டரின் ஆச்சிரமங்களிலும் யாக சாலைகளிலும் புகுந்து, யாகத்
துக்கென்று தயாரிக்கப்பட்ட ஹோமத்திரவியங்களையும் கந்தமூல
பலவர்க்கங்களையும் திருடித் தின்று, பல பால லீலைகளைப் புரிந்து
வந்தான்.

இவ்வாறு செய்துவரு நாளில் ஒருநாள் அம்முனிவர்களுட்
சிலர், "இவன் நமது பகவத் கைங்கரியத்தைப் பாழ்படுத்துகின்
றனன். இவனால் நமது தவத்துக்கே விகாதம் நேரிடும் போற்
றோன்றுகிறது. இவனையாம் என் செய்தலாகும்? பிரமதண்டத்
தினாலும் மரணமில்லாத இவனை எப்படியும் அடக்குதல் அவசியம்.
ஆனால் ஒன்று செய்தலாகும். இவனது வன்மை யிவனுக்கே
தெரியாதொழியின் இவன் சேட்டைகள் ஒருவாறு ஒடுங்கும்,"
என்று தம்முள்ளே யெண்ணிக்கொண்டு, அனுமானைப்பார்த்து,
"ஏ, துஷ்டச் சிறுவனே! இக்கணமுதல் உனது வன்மை
யுனக்கே தோன்றாதிருக்கற் பாலதாகுக. உன்னைப் பலர் சேர்ந்து
பலவாற்றானும் தூண்டித் தூண்டி யுனது வன்மையையும் உன்னை
யும் தோத்திரம் செய்தால் அது உனக்குப் புலனாகக்கடவது"
என்று ஒரு தலையாகச் சபித்தனர்.

இவ்வித சாபத்தை யேற்றவனுமானும் கணநேரத்துள் பற்கள் பிடுங்கப்பட்ட நாகம் போன்று தமதாணவம் அறவே யொடுங்க, அம்முனிவர்கள் அடிமிசைச் சாட்டாங்கமாய் வீழ்ந்து வணக்கத்துடன், "ஓ, தபோதனர்களே! நான் செய்தவையாவும் தப்பிதம். அறியாப்பாலன் இயற்றிய துன்பங்களை மறந்து சிறியனைக் காக்கவேண்டும். தயையுடன் அடியேனை யேற்று எனக்கு வேத வேதாங்கங்களைப் போதிக்கவேண்டும். யானும் தங்கட்கு வேண்டிய பணிகளை யியற்றிப்பதம்பெற வுன்னி யுள்ளேன்" என மொழிந்தான் அதுகேட்ட அம்முனிவர்களும் அனுமானது பணிவைப் புகழ்ந்து அவன் வேண்டியபடியே வேத வேதாங்கங்களை யவனுக்குக் கற்பித்தனர். மாருதியும் தனது அதிதீக்ஷண்யமான அறிவினாலும் கோசர சக்தியானாலும் சில நாட்களுக்குள் அவையாவும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தான்.

(தொடரும்).

---

# மதிப்புரை.

ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்:—இப்பெயர் புனைந்த ஓர் மாதாந்தரப் பத்திரிகை ஆங்கிலத்திலும் தமிழிலும் விஷயங்கள் உள்ளதாய் திருநெல்வேலியிலிருந்து சென்ற ஏப்பிரல்மாதம் முதல் வெளிவருகிறது. தற்காலத்தில் நமது தென்னிந்தியாவில் சிசுக்கள் மரணங்கள் கணக்கற்றனவாய் இருப்பது யாவரு மறிந்த விஷயம். பெற்றோர்கள் அறியவேண்டிய விஷயங்களும் தாயது வேலைகளும் சிசுக்கள் பாதுகாக்கும் முறைகளும் தெள்ளிய நடையில் யாவரும் படித்து பயனடையுமாறு செவ்வனே எழுதப்பட்டுள்ளன. தமிழ் இல்லங்களில் இத்தகைய பத்திரிகைகள் இருப்பது வெகு பயனையளிக்கும். மிஸிஸ் அன்னா தாமஸ் என்னும் வைத்திய அன்னையார் இதன் பதிப்பாசிரியர். வருட சந்தா ரூ. 3. எல்லோரும் வாங்கி பயன் அடைவார்களென்று நம்புகிறோம்.



ஜீவானந்தபோதினி:—இம்மகுடம் வாய்ந்த பத்திரிகையின் முதல் இதழ் நமது பார்வைக்கு வந்தது. அதில் கதைகள் நவீன விஷயங்கள் எழுதப்பட்டுள்ளன. முதற்றொகுதி 20 பக்கங்கள் உள்ளது. வருட சந்தா ரூ. 1. அதிக சந்தாவாயினும் நல்ல காயிதத்தில் அச்சிடப்பட்டால் பலகாலம் பத்திரிகையை வைத்துப் பயனடையக்கூடும். சென்னை தங்கசாலைவீதி 176-ம் நெ வீட்டிலிருந்து வெளிவருகிறது.

பேராசிரியன்:—சென்னை முத்தியாலுபேட்டை புத்தகவியாபாரிகளான N. வெங்கட்டராயலு அண்டு சன் என்பவர்கள் இம்மாதப்பத்திரிகையை வெளிப்படுத்துவோர்களாவர். இதில் சிறுபிள்ளைகளுக்கு கல்விபயிற்றும் முறைகளையும் மற்றுமுள்ள சிறுவர் சிறுமியர்க்கான கதைகளையும் பாலபோத சம்மந்தமான பாடங்களையும் செவ்வனே எளிய நடையில் வெளியிடுகிறார்கள். ஆரம்ப ஆசிரியர்களுக்கு இப்பத்திரிகை நற்பயனளிக்கும் என்பது திண்ணம். வருடசந்தா ரூபா 2.

கற்பகம்:—மாதமொருமுறை புதுவையிலிருந்து வெளிப்படும் ஓர் செந்தமிழ்ச்சஞ்சிகை. கல்வி, சாஸ்திரம், விவசாயம் முதலிய பொது விஷயங்கள் நன்றாக இதில் பதிப்பாகின்றன. பக்கங்கள் குறைவாகயிருந்தாலும் விஷயங்கள் படிக்கத்தக்கன. வருடசந்தா ரூபா 1.

ரஞ்சித போதினி:—இப்பெயருடன் சென்னை அருணாசல முதலி தெரு மாணிக்க விலாசம் அச்சுக்கூடத்திருந்து இப்பத்திரிகை வெளிவருகிறது. நமது பார்வைக்கு வந்துள்ள ஒரு சஞ்சிகையில் புராணக்கதை, கட்டுக்கதைகள், வேடிக்கைக் குறிப்புகள் மலிந்திருக்கின்றன. உயர்ந்த காயிதத்தில் இன்னும் அதிக பக்கங்களுடன் வெளிவருமாயின் வெகுநலம். பத்திரிகைகள் குறைந்த சந்தாவைக்கருதுவதைப் பார்க்கிலும் சந்தாவை யதிகரித்து நல்ல காயிதத்தில் அதிக விஷயங்களை வெளியிடுவது நன்றென நாம் எண்ணுகிறோம். இதன் வருடசந்தா ரூபா 0-14-0.

வேதம்:—நாஸ்திகம் அதிகரித்து தொன்னூன் முறைகள் குன்றி நவீன நாகரீகத்தில் அழுத்தப்பட்டிருக்கும் இக்காலத்தில்

இப்பத்திரிகையின் ஆசிரியர் ஸ்வாமி சிவத்யாநாநந்த மஹரிஷி இவ் "வேதம்" என்ற சஞ்சிகையை வெளியிட முன்வந்தது நந்தமிழ் நாட்டின் நற்காலமே. பல்லாயிரந்தமிழ் மக்களுக்கு வேதவாக்கு களின் அருமையும் பெருமையும் வெளியிட்டு நம்மதத்தின் மாக்ஷி மையைக்காட்டும் இம்மஹரிஷியின் ஊக்கத்துக்கு ஒப்புயர்வில்லையேயாகும். இம்மாதாந்தர சஞ்சிகைகளை வாங்கிப்படித்துப் பயனடைவது நம் தமிழ் நாட்டார்களது முதற்கடமையாகும். விலை முதலிய விஷயங்களுக்கு ரங்கூன் 31-32 பார்வீதியிலிருக்கும் வேத பீரோ மானேஜர் அவர்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

ஞானசூரியன்:—வானப்பிரத்தம் சன்னியாசம் சுகாதாரம் வறுமை முதலிய விஷயங்களை பல தமிழ் நேயர்கள் எழுதியிருக்கிறார்கள். இப்பத்திரிகையும் உயர்ந்த காயிதத்தில் அதிகமான பக்கக்களுடன் வெளிப்படின் தமிழுலகுக்கு மிக நன்மையே. வருட சந்தா ரூபா 1—8—0. தஞ்சை ஜில்லா திருவாரூர் விஜயபுரமிருந்து மாதமாதம் வெளிவருகிறது.

ஜனரஞ்ஜனி:—இதன் முதல் இரண்டு பகுதிகளும் நமது பார்வைக்கு வந்தன. ஜனசமூகம் கல்வி, தேசசரித்திரம் மதம் சாஸ்திரங்கள் நாவல் வேடிக்கை விநோதங்கள் முதலிய விஷயங்களை வெளிப்படுத்துவதாக இப்பதிப்பாசிரியர் வெளியிட்டிருக்கிறார். முதல் இரண்டு சஞ்சிகைகள் போலவே எப்போதும் எல்லா பகுதிகளும் இருக்குமாயின் இதன் பயன் நனிதாகும். வருட சந்தா ரூபா 2. மதராஸ் கொண்டிசெட்டி தெரு 4-ம் நெ. வீட்டிலிருந்து வெளிவருகிறது.

தாருல் இஸ்லாம்:— நமது மகமதிய சகோதரர்களது மத சம்மந்தமான விஷயங்களும் நபிநாயகரது திவ்விய வாக்கியங்களும் தமிழ்ப்பாஷையில் உயர்ந்த நடையிலும் சிறந்த அச்சிலும் வெளிவரும் இனிய மாதாந்தரப் பத்திரிகை—தமிழ் நாட்டு மகமதியர் ஒவ்வொருவரும் இப்பத்திரிகையை வாங்கிப்படித்துப் பயனடைவது அன்னவர்களின் முதற் கடமையாகும். இத்தமிழ் நாட்டில் இஸ்லாம் விஷயமாக வெளிப்படும் பத்திரிகைகளில் இத் "தாருல் இஸ்லாம்" போன்ற பத்திரிகை கிடையாது என்றே சொல்லலாம். வருட சந்தா ரூபா 3. வெளியிடுவோர் தஞ்சை ஜில்லா நாச்சியார் கோவில் முஸ்லிம் சங்கத்தார்.



பிரஜாநுகூலன்:—இதன் பதிப்பாசிரியர் இந்நாட்டுக்குப் புதியவரல்ல. ஸ்ரீரங்கம் எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடுவின் கல்விப் புலனும் தமிழ் நடையும் வெகு உயர்ந்ததென்று சொல்வது மிகையாகாது. இதன் வயதும் 18-ஆய்விட்டது. மெஜாரிட்டிப்பருவமடைந்ததால் வெகு ஊக்கத்தோடு இன்னும் பல் காலம்தமிழ் நாட்டில் இருந்து நன்மை புரியுமென்று வேண்டுகிறோம். வருட சந்தா ரூபா 2.

ஆயுள்வேதம்:—இவ்வருஷம் சித்திரை மாதமுதல் வேலூரிலிருந்து வெளிவரும் வைத்திய சுகாதார சம்மந்தமான ஒரு தமிழ் வைத்திய சஞ்சிகை. வருட சந்தா ரூபா 1. இதில் வெளிவரும் சிகிச்சைகள் வெகு சுலபமும் நிச்சயமுமானவையென்றே நம்புகிறோம். தமிழில் சிறந்த வைத்திய சஞ்சிகையில்லாத இக்காலத்தில் இப்பத்திரிகை வெளிவருவது மிகு அவசியமே.

குறிப்பு:—அடுத்த பதிப்பில் மற்றுள்ள மாதாந்தர வாரப்பத்திரிகைகளின் மதிப்புரைகள் வெளிவரும்.

பத்திரிகாசிரியர்.

---

# ஜீவகாருண்யம்.

"ஜீவகாருண்யமுள்ள சகோதர சகோதரிகாள்!

"மோக்ஷமது பெருவதற்கு சூக்ஷ்மம் சொன்னேன்
மோகமுடன் பொய்களவு கொலைசெய்யாதே"

என்று அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றனர். ஆதலின் "கொலை, களவு, கள், காமம், சூது" (பொய்) என்னும் பஞ்சமா பாதகங்களிலும், கொலை பாவமே எல்லாவற்றினுங் கொடியது.

அன்பர்களே! அக்கொடிய பாதகத்தை அகற்றினலன்றி "சர்வஜீவ காருண்யமுடைய சர்வேசன்" அருளைப் பெற முடி

யாது. இங்ஙனம், நெடியகடல் சூழ்ந்தப் பிரபஞ்சத்தின்கண் பெறுதற்கரிய மானிட தேகத்தைப்பெற்ற சகோதர சகோதரிகளே!

"வேதநூல் பிராயம் நூறு மனிதர்தாம் புகுவரேனும்
பாதியு முறங்கிப் போகும் நின்றதில் பதினையாண்டு
பேதைபா லகனதாகும் பிணிபசி மூப்புந் துன்பம்
ஆதலால் பிறவி வேண்டேன் அரங்கமா நகருளானே"

என விளம்பியபடி நாம், இந்நிலவுலகின்கண் ஜீவித்திருப்பது நூறுண்டாயினும், அவற்றுள் நித்திரையில் ஐம்பதாண்டும், பாலியத்தில் பதினைந்தாண்டும் போக, மிகுதியுள்ள வாணாளில் "பிணி, பசி, மூப்பு, துன்பம்" முதலியவைகளை யனுபவித்து, மறுமையிலடைய வேண்டிய மோக்ஷப்பதவியைத் தேடிக்கொள்ள வேண்டியவர்களானபடியால் முத்தியடைவதற்கு காரணமாயுள்ள "ஜீவகாருண்ய" ஒழுக்கத்தை நம்முயிருள்ளபோதே வாணாளை வீணாகக் கொள்ளாமலும், ஒரு "ஜீவன்" களையும் கொலை செய்யாமலும், தன்னுயிர்போல் மண்ணிற் பிறந்த உயிர்களனைத்தையும் பாதுகாத்தும், வருவதோடும் அச் "சீவன்" களை வதை செய்யாமலும் "ஜீவகாருண்ய" ஒழுக்கமுடையவராயுமிருத்தல்வேண்டும் இஃதைப் பார்க்கினும் வேறொன்றும் சிறந்த தருமமில்லை யென்பதே வேதத்தின் சம்மதம். (இதுநிற்க).

மனிதனுக்கு "மாமிச உணவு" தேவையில்லை யென்றும், காய், இலை, கிழங்கு, பருப்பு மிதலிய பதார்த்தங்களே ஆயுளை விர்த்தி செய்தும், பரத்தில் முத்தியைத் தருகுமென்றும், அவர்களே "ஜீவகாருண்யம்" உடையவர்களென்றும் இதிகாச புராணங்களெல்லாம் முறையிடுகின்றன. மேலும், வேதநாயகம் பிள்ளையவர்கள் கூறிய நீதி நூலிலும்,

"காய் இலை கிழங்கே தக்க கறியதாம் அதனை உண்போர்
ஆயுள்நாள் வளரும் ஊழ்த்தல் அருந்துவோர் உயிர்கட்கெல்லாம்
தாயெனும் ஒரு கருத்தன் சாபத்தைப் பறிப்பாரென்னில்
பேயெனும் கொடிய அன்னார் பிழைக்குமாறு என்கொல் அம்மா!"



என்று கூறியிருக்கிறபடியால், கந்த மூலாதிகளை விட்டுவிட்டு "ஜீவவதை" செய்து மாமிசத்தை உண்டு, மீளா நரக துன்பத்திற்காளாவது உத்தம சென்மமாகிய மானிடர்கட்கேற்ற ஒழுங்கல்லவே;

சகோதர சகோதரிகாள்! மனதை அங்குமிங்கும் அலைய விடாது கவனியுங்கள்! ஒவ்வொரு ஜீவாத்மாவுக்கும் நம்மைப் போலவே, இன்பதுன்பங்களைக் கண்டறியும் சக்தியை "கடவுள்" தந்தருளியிருக்கின்றார் என்பதை ஒவ்வொருவரும் ஆழ்ந்து யோசித்துப் பார்க்குமிடத்தில் மனதிற்குப் புலப்படாமற்போகாது.

அன்பர்களே! நம்முடைய தேகத்திலே ஒரு முள்ளாவது அல்லது, வேறுயாதேனுமொரு ஆயுதங்கள் பட்டு புண்செய்துவிட்டால் நமக்கு எவ்வளவு அவஸ்தையையும், மனதிற்குத் துன்பத்தையும் தருகிறது. இப்படியிருக்க, நம்மைப்போன்ற ஒரு "ஜீவனை"ப்பிடித்து அதை வதை செய்யும்போது அச்சீவனின் "ஜடம்" துடிதுடிப்பதைப் பார்த்தும், அப்பிராணி அவஸ்தை யடைகிறதென்பதை உணராமலும், அஃது கூச்சலிடுவதைத் தனக்குப் பொறுக்க முடியாத துன்பத்தைத் தருகிறதென்பதைக் கூறிற்றென்பதை அறியாமலும் மூர்க்கத்தனத்தினால் அச்சீவனை கொலைபுரிபவன் மனதை எதற்கொப்பிடுகிறது, அந்தோ! கொலைபாதகர்களே! நீதித்துரோகிகளே! ஆஹா! உங்கள் மனமென்ன இரும்போ! கருங்கல்லோ! செவிகளிரண்டும் செவிடோ! கண்களிரண்டும் குருடோ? கொலைபாதகம் பெரிதே!

(தொடரும்)

எஸ். கே. கோவிந்தசாமி பிள்ளை.

## பெண்கல்வி.

(68-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

இவர்கள் தங்களது வேலைக்காரர்களுக்கு அதிகத்துன்பங் கொடுக்க மாட்டார்கள். ஜீவகாருண்யம், தயை, தேசபக்தி, இராஜபக்தி, பெற்றோர்கள் பக்தி இவைகளிவர்களிடஞ் செறிந்து

விளங்காநிற்கும். இவர்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பாடங்கள் கற்பிப்பார்கள். இதுவன்றி தெய்வபக்தியை பற்பல விதங்களாக அறிவிப்பார்கள். இங்கு (Spartans) ஸ்பார்ட்டன்ஸ் என்ற ஒருவகை ஆதிகிரேக்க ஜாதியின் பெண்களைக் கவனிக்கத்தக்கது. "நூலைப்போல சீலை, தாயைப்போல பிள்ளை" என்பதுபோல் தாய் கெட்டவர்களாயின் பெண்களும் (பிள்ளைகளும்) கெட்டவர்களாகவே இருப்பார்கள். "தாயைத் தண்ணீர் துறையில் பார்த்தால் பெண்ணைவீட்டில் பார்க்க வேண்டுமா? என்ற மேலோர்கள் அமிர்தமான பழமொழியைச் சிந்தித்துப் பாருங்கள்.

பெண்களின் கல்வியால் புருஷர்களுக்குங் கல்வி பெருகும். ஏனெனில் பெண்கள் தங்களை (யாதாவது ஒரு கேள்வி கேட்டுவிட்டால் தங்களுக்குத் தெரியாது இயங்குவார்களாயின் ஏளனஞ் செய்வார்கள் என்று அஞ்சி) விட கல்வியில் மிஞ்சாதிருக்கும்படி, அவர்களுக்குக் கல்வியில் மனஞ் செல்லும். இங்கு தாய்ப்பாஷைக் கல்வியைக் கூறுவதால் பெண்கள் தாய்ப்பாஷையில் விருத்தியடைந்து தாய்ப் பாஷையிலே ஓர் கேள்வி கேட்டுவிட்டால்; உதாரணமாக:—முருகக்கடவுளுக்கு கந்தன் என ஏன் பெயர் வந்தது? என்றால் புருஷன் அதற்குப் பதிலளிக்காவிட்டால் இவனுக்கு அவமானம் உண்டாகிறது. அதனால் இவன் அன்று முதற்கொண்டு கல்வியிற் தேர்ச்சிபெற ஆரம்பிப்பான். ஆனதால் பெண்களின் கல்வியால் புருஷர்களுக்கும் கல்வி விருத்தியாகும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்காநிற்கும்.

புருடர்கள் அன்னியதேசம் போயிருக்கையில், கடிதம்போட்டால் பிறருக்குத்தெரியாது, தாங்களே படித்தறிந்து தன் புருஷன் மனதிற்கிசைந்தாற்போல் பதிலளிக்கலாம். பொருளுக்குத் திருடனைக்காவல் வைத்ததுபோலும், ஆட்டிற்குப் புலியைக் காவல் வைத்ததுபோலும், பாலுக்கு பூனையைக் காவல்வைத்தது போலும், புல்லுக்குப் பசுவைக் காவல்வைத்ததுபோலும், கல்வி வாசனையேயில்லாத பெண்கள் கொழுநனுல் வரையும் கடிதங்களைப் பிறரிடங்காட்டித் துன்பப்படுகின்றனர். துன்பப்பட்டிருக்கின்றார்கள். இனித்துன்பப்படுவார்கள் என்பது திண்ணம். பெண்கள்



கற்றறிந்தவர்களா யிருப்பார்களாயின், ஆகாராதிகளை சுத்தமாயும், தேகத்தை சுத்தமாயும், காற்று வீசும்படி நல்ல சௌகர்யமான வீடுகளை சுத்தமாயும்; ஆடைகள் சுத்தமாயும், புனல் சுத்தமாயும் வைத்திருப்பார்கள். இதனால் யாதொரு வியாதியும் தங்களுக்காவது, தங்கள் காந்தனுக்காவது, சேய்களுக்காவது மற்றும் தங்களுடன் கூடிவசிக்கும் பந்துக்களுக்காவது வராமறறடுக்கும் ஓர் சஞ்சீவியாகும். கல்வி யில்லாதவர்கள் நோய்களுக்கு இடங்கொடுத்து, அதனால் தாங்களும், தங்களைச் சேர்ந்தவர்களுங் கஷ்டப்படுவார்கள் என்பதுண்மை. தற்காலத்திலும் கல்வி வாசனையேயறியாத சிறுசிறு கிராமங்களில் பெண்களென்ன, ஆண்களென்ன, சிறுவர்களென்ன முதலிய யாவருங் கஷ்டப்படுவது கண்கூடு.

கல்வியறிவுடைய பெண்கள் தத்தம் குடும்பங்களில் தங்களால் ஆனவரையில் சண்டை சச்சரவில்லாது நீக்கி சமாதானமாயிருப்பார்கள். அவ்வாறு சண்டை சச்சரவுகள் ஏற்பட்டாலும் அதைவெளிக்குத் தெரிவிக்காமலிருப்பார்கள். கல்வியறிவடையாதவர்கள் எப்பொழுதும் சண்டை சச்சரவுடன் சமாதானமின்றி வசிப்பார்கள். இங்கு கல்லாத பெண்களின் இழிவை ஓர் பாடலால் நோக்குங்கள் :—

"எழுத்து வாசக மறியாதவள் மட்டி
ஏது மறியாளவள் சுரண்டுவாள் சட்டி
கழுத்திலே யவளுக்குத் தாலியைக் கட்டி
காரியமில்லை யதுகாசிக்கு நட்டி."

என்று மேலோர் கூறியவாறு, இதுவரையிலும் நாம் கல்வியறியாத பெண்களின் இழிவையும் கற்றறிந்த பெண்களின் உயர்வையும் கூறினோம். இங்கு இருவர்களையும் சீர்தூக்கி நடுவு நிலைமையாக செப்புவோமாயின், கற்றவர்களுக்கு என்றும் உயர்வு தான், கற்றறியாதவர்களுக்கு இழிவுதான் என்பது புலனாகும். இங்கு கம்பன், ஒட்டக்கூத்தர் முதலிய புலவோர்கள் காலத்தில் மிகவுங் கீர்த்திபெற்று விளங்காநின்ற நமது மூதாட்டி ஔவையாரைக் கவனியுங்கள். யார் எக்கொடுமை செய்தாலும் அதை சகித்துக்கொண்டு மிகவும் பொறுமையுடன் அவர்களுக்கு இன்பத்தை அளித்து வந்தார்கள். ஆனதால் பெண்களுக்குக் கல்வி அவசியமாகும் என்பது விளங்குகின்றது.

நாம் இங்கு நமது பெண்களுக்குத் தற்கால கல்வியாகிய ஆங்கிலம், ஆங்கிலங்கலந்த தமிழ் இவைகளைப் போதிக்கலாமா? அதனால் அவர்களுக்கு நன்மை யுண்டாகுமா? அல்லது தீமையுண்டாகுமா யென்று சற்று ஆராய்வோம் தற்கால ஆங்கில பாடசாலைகளாகிய எலிமெண்டரி பாடசாலைகளாகினும், உயர்தர பாடசாலைகளாகினும் நம்மதத்தைப் போதிப்பதல்ல; ஆங்கிலர் மதத்தையும், அன்னவர்கள் பாஷையையும் கற்பிக்கின்றனர். இராஜாங்கப் பாஷை கற்கவேண்டியது அவசியம். பைபில் உமனும அப்படியே போதிக்கின்றனர். பாதிரிமார்கள் வைத்திருக்கும் எலிமெண்டரி பாடசாலையில் ஒவ்வொருநாளும வேதத்தைப் போதிக்கின்றனர். வேதத்திலுள்ள கதைகளையே போதிக்கின்றனர். பாட புத்தகங்களோ கர்த்தரின் ஜபத்தைப் பற்றியதாகும். (இங்கு அவர்கள் மதத்தைத் தூஷணஞ்செய்ய வந்தவனல்ல.) உதாரணமாக:—“பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக”...........இன்னும் பல சொல்லி கடைசியில் ஆமேன் என்று சொல்லிக் கொடுக்கின்றார்கள். (இங்கு நான் அவர்களை (பாதிரிமார்களை) எளனஞ்செய்ய வந்தவனல்ல. ஆனல் அவர்கள் செய்வதுபோல் ஏன் நாம் நமது மதத்தை போதிக்கலாகாதுயென்றும், அவரவர்களுக்குகந்த மதத்தை போதிக்கும்படி சொல்லிவருகின்றேன்.) பிறகு உயர்தரப் பாடசாலைகளில் மேனாட்டார் சரித்திரங்களை சொல்லிக் கொடுக்கின்றார்கள். கணக்கு, சைன்ஸ், பூகோளம், சரித்திரங்கள் எல்லாம் ஆங்கிலபாஷையிலேயே யிருக்கின்றன. அவையே போதிக்கப்படுகின்றன.

(படரும்.)

எஸ். என். ராமு,

கூறை நாடு.

குறிப்பு:—சந்தாதாரர்களுக்கு நாம் பரிசாக (இனமாக) அனுப்ப எண்ணிய புத்தகத்துக்குத் தபால்சார்ஜ் 1-அணுவும் ஒவ்வொரு சந்தாதாரரும் தபால் முத்திரை மூலம் அனுப்பவும். தபால் முத்திரை யனுப்பாதவர்களுக்கு புத்தகம் கிடையாது.

பத்திரிகாசிரியர்.



# “பைந்தமிழ்” பஞ்சாங்கம்.

(All Rights Reserved.)

ருத்ரோத்காரி௵ ஆடி௴ 1923௵ ஜூலை௴-ஆகஸ்டு௴ இங்கிலீஷ் 1923, கலியுக௵ 5025, சாலிவாகன௵ 1846, கொல்லம் 1098, விக்ரமசக 1980, ஹிஜரி 1341, பஸலி 1332, பிரபாவதி 57.

| ஜூலை மாதம். | ஆடி மாதம். | கிழமைகள். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | புண்யகாலம், விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 16 | 1 | திங் | திரு 56-7 | ஆயி 27-37 | சித் 41-10 | கடகரவி 24-10, தக்ஷிணாயனம். |
| 17 | 2 | செ | சது 51-55 | மக 25-46 | விய 35-25 | கிணறு, குளம்வெட்ட. |
| 18 | 3 | புத | பஞ் 46-52 | பூர 23-6 | வரி 28-59 | கணக்கு அப்யசிக்க. |
| 19 | 4 | வியா | சஷ் 41-21 | உத் 19-46 | பரி 22-42 | கிருஷி ஆரம்பஞ்செய்ய. |
| 20 | 5 | வெள் | சப் 35-28 | அஸ் 16-2 | சிவ 14-47 | பசு, எருமை, குதிரை, வண்டி வாங்க. |
| 21 | 6 | சனி | அஷ் 29-23 | சித் 12-0 | சித் 7-16 | குருவக்ர நிவர்த்தி. |
| 22 | 7 | ஞாயி | நவ 23-16 | சுவா 7-54 | சுப 52-8 | உபநயனம், வித்தியாரம்பஞ்செய்ய. |
| 23 | 8 | திங் | தச 17-22 | விசா 3-54 | சுப் 44-55 | சாக்ஷுஷமனு. |
| 24 | 9 | செவ் | ஏகா 11-52 | அனு 0-16 | பிரா 38-5 | கோபதம விருதம், நிலம் வாங்கிப்பயிரிட, |
| | | | | கேட் 56-52 | | [பொன்னேரிகட்ட. |
| 25 | 10 | புத | துவா 6-55 | மூல 54-43 | மா 31-45 | கிழங்குநட. |
| 26 | 11 | வியா | திர 2-39 | பூரா 53-14 | வை 25-57 | களஞ்சியம்வைக்க. |
| | | | சது 56-37 | | | |
| 27 | 12 | வெள் | ○பௌ 57-6 | உத் 52-48 | விஷ் 21-25 | காஞ்சி கஜேந்திரமோக்ஷம், யஜுர்சிராவ |
| 28 | 13 | சனி | பிர 56-4 | சிர 53-31 | பிரீ 17-7 | வாகனமேற, தானியம்வாங்க. [ணம். |
| 29 | 14 | ஞாயி | துதி 56-22 | அவி 55-29 | ஆயு 14-18 | ஆபரணம்பூண, தூண்வைக்க. |
| 30 | 15 | திங் | திரு 52-54 | சத 58-42 | சௌ 12-21 | மாடு முதலானவை வாங்க. |
| 31 | 16 | செவ் | சது 60-0 | பூரட் 60-3 | சோ 11-24 | பிரவாகபூர்த்தி. |

| ஆங்கில மாதம். | தமிழ் மாதம். | கிழமை. | திதி. | | நக்ஷத்திரம். | | யோகம். | | புண்யகாலம்; விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 17 | புத | சது | 0-39 | பூரட் | 3-6 | அதி | 11-18 | [illegible] |
| 2 | 18 | வியா | பஞ் | 4-24 | உட் | 8-29 | சுக | 11-58 | கருவை, தஞ்சா 18-ம் பெருக்கு உத்சவம். |
| 3 | 19 | வெள் | சஷ் | 8-53 | ரேவ | 14-31 | திரு | 13-11 | பொன்னேரிகட்ட. |
| 4 | 20 | சனி | சப் | 13-43 | அசு | 20-53 | சூல | 14-45 | காவாக்கடம். |
| 5 | 21 | ஞாயி | அஷ் | 18-25 | பர | 27-14 | கண் | 16-11 | சிவாலயங்களில் ஆடிப்பூர உத்சவம். |
| 6 | 22 | திங் | நவ | 23-5 | கார் | 32-10 | விரு | 17-24 | கிருத்திகை. |
| 7 | 23 | செவ் | தச | 26-53 | ரோஹ | 38-24 | துரு | 18-7 | .................. |
| 8 | 24 | புத | ஏகா | 29-38 | மிரு | 42-35 | வியா | 18-0 | சர்வ ஏகாதசி, மாத்வ ஏகாதசி. |
| 9 | 25 | வியா | துவா | 31-15 | திரு | 45-38 | அரி | 17-5 | பிரதோஷம். |
| 10 | 26 | வெள் | திர | 31-37 | புன | 47-26 | வஜ் | 15-10 | ஜலயபிரதோஷம். |
| 11 | 27 | சனி | சது | 30-43 | பூச | 47-59 | சித் | 12-14 | .................. |
| 12 | 28 | ஞாயி | ● அமா | 28-36 | ஆயி | 47-23 | விய | 8-20 | ஆடி அமா, தீபஸ்தம்பபூஜை, |
| 13 | 29 | திங் | பிர | 25-25 | மக | 45-43 | வரி | 3-31 | கட்டிச்சப்பமைக்க. [அகஸ்தியோதயம். |
| | | | | | | | பரி | 54-25 | |
| 14 | 30 | செவ் | துதி | 21-17 | பூர | 43-12 | சிவ | 51-35 | ஆடிப்பூரதீர்த்த [வாரி. |
| 15 | 31 | புத | திரு | 26-26 | உத்ர | 40-1 | சித் | 14-42 | பாகசதூர்த்தி. |
| 16 | 32 | வியா | சது | 11-0 | அஸ் | 36-18 | சாத | 31-27 | பிரயாணம்செய்ய |

| | | | |
|---|---|---|---|
| | | | சுக் புத |
| கே | 1-கட-புத 15-கட-சுக் 17-சிம்-புத | | ரவி செ |
| | | | ராகு |
| | | குரு | சனி |

PRINTED BY SOLDEN AND CO., FOR K. JAGA[illegible]AR, B.A., EDITOR AND PUBLISHER, MADRAS.

11-4-2000